செப்டம்பர் - 2013

திருவள்ளுவர் ஆண்டு 2044

செந்தமிழ்

திங்கள் இதழ்

தொகுதி : 57
பகுதி : 11

விலை ரூ. 10/-

மதுரைத் தமிழ்ச்சங்கம்
14-09-1901
THE MADURAI TAMIL SANGAM

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு

மதுரை நான்காம்
தமிழ்ச்சங்கத்தின்
113வது ஆண்டு
தொடக்க விழாவினை
செந்தமிழ்க் கல்லூரியின்
செயலாளர்
திரு. இரா. குருசாமி அவர்கள்
குத்துவிளக்கேற்றி
தொடங்கி வைத்தார்.
உடன் இருப்பவர்கள்
தமிழ்ச்சங்கச் செயலாளர்
திரு. இரா. அழகுமலை,
துணைத்தலைவர்
திரு. க. முத்தையாபசும்பொன்
செந்தமிழ்க் கல்லூரித் தலைவர்
திரு. சு. வீரணசாமி மற்றும்
முதல்வர் முனைவர் மு. மீனா

செந்தமிழ்

(தோற்றம் 1903)

தொகுதி : 57 திங்கள் இதழ்

பகுதி : 11 திருவள்ளுவர் ஆண்டு 2044

செப்டம்பர் 2013

வள்ளல் பாண்டித்துரைத்தேவர்
21.03.1867-02.12.1911

இதழ்க் கட்டணம்	உள்நாடு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம்	ரூ. 100	ரூ. 600
ஆயுள் கட்டணம்	ரூ. 1000	
புரவலர் கட்டணம்	ரூ. 5000	ரூ. 6000
தனி இதழ்க் கட்டணம்	ரூ. 10	

ஆசிரியர்
இரா. அழகுமலை எம்.ஏ., எம்.ஃபில்.,
செயலாளர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்,
மதுரை.

பொருளடக்கம்

அகரமும் இறைவனும்	க. கதிரேசன்	4
குறுந்தொகையில் கார்கால நிகழ்வுகள்	ஆ. வாசுகி	8
ஆல்	ஆறுமுகம் ஓம்பொறி	13
திருக்குற்றாலத் தலபுராணத்தில் பெரிய புராணச் செய்திகள்	சா. ஜெகன் அன்டோ திலக்	15
குறுந்தொகை காட்டும் பொழுது போக்குகள்	முனைவர் சோ. முத்தமிழ்ச்செல்வன்	18
பூவும் பாவும் (சென்ற இதழ் தொடர்ச்சி)	புலவர் சி. பாண்டுரங்கன்	25
பாரதிதாசனின் கவிதை மொழிபெயர்ப்பில் உவமை – ஒரு பார்வை	உமாதேவி அழகிரி	34
மதுரைத் தமிழ்ச்சங்கம் 113ஆம் ஆண்டு தொடக்க விழா		39

இதழ் மணம்

பேரன்புடையீர், வணக்கம் !

மதுரை நான்காம் தமிழ்ச் சங்கத்தின் 113ஆம் ஆண்டு தொடக்கவிழா மகிழ்வோடு இம்மாத இதழ் வாசகர்கள் கையில் தவழ்கிறது.

நம் செம்மொழியாம் தமிழ் மொழியின் அகர உயிரும் இறைவனும் ஒன்றி நிற்கும் போக்கினை அகரமும் இறைவனும் என்னும் கட்டுரை எளிமையாக வெளிக்காட்டியுள்ளது. குறுந்தொகை இலக்கியம் காட்டும் கார்கால நிகழ்வுகளை ஆய்வாளர் ஆ. வாசுகி தன் கட்டுரையில் சான்றுடன் எடுத்துக்காட்டியுள்ளார்.

ஆல் என்னும் சொல் மரம், நஞ்சு, உருபு மற்றும் அசை நிலையாக இலக்கியங்களில் பயின்று வரும் முறைமையை ஆறுவிரல் ஐம்பொறி சிறப்புற எடுத்துக்காட்டியுள்ளார். நாயன்மார்கள் பற்றிய செய்திகள் திருக்குற்றாலத் தலபுராணத்தில் எடுத்தாளப் பெற்றமையை திரு. சா. ஜெகன் அண்டோ திலக் எடுத்தியம்பியுள்ளார்.

சங்ககால மக்களின் வாழ்வில் பின்பற்றப்பட்ட பொழுதுபோக்குகளை முனைவர் சோ. முத்தமிழ்ச் செல்வன் தன் கட்டுரையில் சான்றுடன் வெளிப்படுத்தியுள்ளார். புலவர் சி. பாண்டுரங்கனின் பூவும் பாவும் என்னும் கட்டுரை பாக்களில் இடம்பெற்றுள்ள பூக்களின் மேன்மையை எடுத்துக் காட்டி இவ்விதழில் நிறைவடைகிறது.

மொழிபெயர்ப்பு முயற்சியில் பாரதிதாசனின் உவமை மொழியாக்கம் பெற்றுள்ளமையை உமாதேவி அழகிரி தன் பாரதிதாசனின் கவிதை மொழி பெயர்ப்பில் உவமை - ஒரு பார்வை என்னும் கட்டுரையில் வெளிப்படுத்தியுள்ளார். மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் 113ஆம் ஆண்டு தொடக்க விழாவில் நடைபெற்ற உரையரங்க நிகழ்வினை முனைவர் மு. மீனா தமிழறிஞர்களின் பார்வைக்குக் கொணர்ந்துள்ளது மகிழ்வினை நல்குகிறது.

செந்தமிழ் இதழின் சீரிய பணிக்கு உதவிவரும் தமிழ் அறிஞர்களுக்கும், தமிழ் ஆர்வலர்களுக்கும் செந்தமிழ் வாயிலாக நன்றியைப் புலப்படுத்திக் கொள்கிறேன்.

ஆசிரியர்

அகரமும் இறைவனும்

குன்றக்குடி ஆதீனப் புலவர்
க. கதிரேசன்

இறைவனது பெருங்கருணை வாய்ந்த பேராற்றலை அறிஞர் பெருமக்கள் ஒவ்வொருவரும் தத்தமக்கே உரிய வகையில் பலப்பல விளக்கங்களைக் கூறி, விளக்கியுள்ளனர். அவற்றுள் உவமை வழி விளக்கியுள்ளதும் ஒன்று. இங்ஙனம் அமைந்த உவமைகளுள் மூத்ததும் முதன்மையானதும் ஆகிய ஓர் உவமையைத் திருவள்ளுவர் முதல் பிற்காலத்து வந்த அருளாளர்களும், அறிஞர்களும் தத்தம் அரிய நூல்களுள் எடுத்தாண்டுள்ளனர். இவர்கள் அனைவரும் காலத்தால் வேறுபட்டவராயினும் அனைவரும் ஊன்றி நின்ற ஒப்பற்ற உவமை திருவள்ளுவர் காட்டிய உவமையே ஆகும். அவ்வுவமையும் பொருளும் கொண்டு இயங்குவது,

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு — திருக்குறள் - 1

என்பதாகும்.

ஒரே கருத்தைப் பல்வேறு பாக்களில் பண்களில் அமைத்து இசைத்து மகிழ்தல் போல இறை நிலை குறித்து திருவள்ளுவர் கூறியுள்ள ஒப்பற்ற ஒரே உவமையைத் தத்தம் நூல்களுள் பல்வகை யாப்புகளில் தந்துள்ளனர். கோப்பைகள் பலவிதம், அதில் உள்ள பழச்சாறு ஒன்றே என்றாற்போல.

அகர உயிர்போல் அறிவாகி எங்கும்
நிகரில் உயிர் நிற்கும் நிறைந்து — திருவருட்பா - 1

.... அக்கரங்கள் தோறும் சென்றிடும் அகரம் போல் நின்றனன் சிவனும் சேர்ந்தே. — சித்தியார் சு. ப. 92

அக்கரங்கட் (கு) எல்லாம் அகரஉயிர் நின்றாற்போல்
மிக்க உயிர்க்குயிராய் மேவினோம் — உண்மை விளக்கம், 29

அகர உயிர் எழுத்து அனைத்தும் ஆகி வேறாய்
அமர்ந்தது என அகிலாண்டம் அனைத்தும் ஆகி
– தாயுமானவர், பொருள் விளக்கம், 12

எழுத்தினுள் அகரமே என்ன எங்களாலும்
முழுத்துணர் முதல்வன் – கவிராட்சக் கச்சியப்பர், பூவாளூர்ப் புராணம்

அகரமும் ஆகி அதிபனும் ஆகி – அருணகிரிநாதர்

அவ்வண்ணம் ஆகிய எம்மான் – சிராமலைக் கோவை ,398

என்பர்.

இவ்வுவமைக்கும் பொருளுக்கும் இடையே உள்ள அரிய பொருத்தப்பாட்டினைக் காண்பதே இக்கட்டுரையின் உட்கோள்.

நம் தமிழ் மொழியிலுள்ள அகர உயிரும் இறைவனும் முறையே எழுத்துகட்கும் உலகிற்கும் உதவுவதில் ஒன்றாய், உடனாய், வேறாய் நின்று உதவுதல் என்ற மூன்று நிலைகளில் அமைவதைக் காணலாம்.

ஒன்றாய் நின்று உதவுதல்

அகரத்தின் ஒலி வடிவம் அங்காப்பால் அமைவது. இயல்பாய் நம்பால் அமையும் அங்காப்பு ஒன்றே அகர ஒலிக்குப் போதுமானது. அகரத்திற்கு உரிய இவ்வங்காப்பின்றிப் பிற எவ்வகை எழுத்தும் உருப்பெறுதல் – ஒலி வடிவம் பெறுதல் இயலாது. அங்காப்பாகிய வாய்திறவாத போது ஒலி வடிவு ஏது? பிற எழுத்துக்களை ஒலிக்கத் தொடங்கும் முதல் நிலையிலேயே இவ்வங்காப்பு நுட்பமாய் அமைந்து உரிய எழுத்து ஒலி வடிவம் பெறுவதற்கு வழி செய்கிறது. இவ்வங்காப்பு நிலையை உரிய பிற எழுத்து ஒலி வடிவத்திலிருந்து பிரித்தறிதல் இயலாது.

அது போலவே இறைவனும் உலகினின்று தான் பிரித்தறிய இயலாதவாறு நுட்பமாய் ஒன்றியுள்ளான். அதன் மூலம் உலக இயக்கத்திற்கு உதவுகின்றான்.

உடனாய் நின்று உதவுதல்

அகர உயிரின் மற்றொரு வடிவம், வரி வடிவம், இது சுழி, வளைகோடு, இடைக்கோடு, குத்துக் கோடு ஆகியவற்றாலாயது. இவ்வகை வரி

வடிவங்களுள் யாதொன்றுமின்றிப் பிற எழுத்துக்கள் வரி வடிவம் பெறுதல் இயலாது. இக்கோட்டு வடிவங்களால் அகரம் பிற எழுத்துக்களுடன் நம் கட்டிலனாகுமாறு உடனாய் நின்று உதவுதல் நாம் அனைவரும் கண்ணாரக் காணக் கிடக்கும் நிலையாகும்.

இதுபோலவே, இறைவன் உலகினை உடனாய் நின்றும் இயக்குகிறான். உலக இயக்கத்தின் பொருட்டு அவன் எல்லாம் பொருள்களுமாய் உடன் நிற்கும் மாட்சியை அப்பரடிகள்,

அப்பன் நீ அம்மநீ ஐய னும் நீ
அன்புடைய மாமனும் மாமி யும்நீ
ஒப்புடைய மாதரும் ஒண் பொரு ளும் நீ
ஒரு குலமும் சுற்றமும் ஓரூ ரும் நீ
துய்ப்பனவும் உய்ப்பனவும் தோற்று வாய்நீ
துணையாய் என் நெஞ்சம் துறப்பிப் பாய் நீ
இப்பொன் நீ இம்மணி நீ இம் முத்தும் நீ
இறைவன் நீ ஏ (று) ஊர்ந்த செல்வன் நீயே.

– தலத்திருத்தாண்டகம் – 1

என்று நம்முடனாய் நின்று நம்மை அவர் இயக்கும் உண்மையைக் காட்டுகிறார்.

வேறாய் நின்று உதவுதல்

பிற எழுத்துகளுடன் ஒன்றாய், உடனாய் நின்று இயக்கும் அகரம், பிற எழுத்துக்களுடன் சேராது தனித்தும் நிற்க வல்லது. இவ்வகையில் பிற எழுத்துக்களின் ஒலி வடிவையோ, வரி வடிவையோ தான் பெறுதல் இல்லை. தனக்கென்று ஓர் ஒலி வடிவத்தையும் வரி வடிவத்தையும் பெற்று முன்னிலை வகிக்கிறது.

இதுபோலவே இறைவன் உலகுடன் ஒன்றாய், உடனாய் நின்று இயக்கிய போதிலும் தான் தனித்து வேறாய் நின்றும் அருள்கிறான். உயிர்க் குணங்கள் பலப்பல. அவை எண்ணிலடங்கா, இறைவனோ.

இக்குணங்களுள் எந்த ஒன்றினையும் தான் பெறாதது மட்டுமன்றி உயிர்கட்கு இல்லாத எண் குண வடிவனாயும் விளங்குகின்றான். அக்குணங்களாவன தன்வயத்தன் ஆதல், தூய உடம்பினன் ஆதல், இயற்கை உணர்வினன் ஆதல், முற்றும் உணர்தல், இயல்பாகவே பாசங்களின் நீங்குதல், பேரருள் உடைமை, முடிவு இல் ஆற்றலுடைமை, வரம்பு இல் இன்பமுடைமை என்பன. இவை உயிர்கள் மாட்டு இல்லாதன. இறைவன் ஒருவனுக்கே உரிய குணங்கள். இதனால் தான் அவன் வேறாய் நின்று "ஆட்டுவிப்பானாக, அடங்குவிப்பானாக, ஓட்டுவிப்பானாக, உருகுவிப்பானாக, பாட்டுவிப்பானாக, பணிவிப்பானாக, காட்டுவிப்பானாக" விளங்குகின்றான் என்பார் அப்பரடிகள்.

எனவே அகரம் இலாது பிற எழுத்துகள் இல்லையானாற் போல, இறைநிலையும் தான் அலாது உலகம் இல்லை என்பதை விளக்கும் அரிய பெரிய நுட்பமான உவமை இது.

வாசகர் வாசகம் (1)

செந்தமிழின் தொண்டைப் போற்று

வெள்ளைவா ரணர் சிறப்பை விரித்துரைத்து
வெற்றியுறு செந்தமிழின் பணிகணித்து
நல்லாசான் இலக்கணத்தை எடுத்தியம்பி
நம்காப்பி யச்சிலம்பின் பெருமை சாற்றி
அள்ளியந்த நற்றிணையின் கருத்தைக் கொட்டி
அருள் முருகன் திருப்பெருமை ஆற்றல் காட்டி
தொல்காப்பி யப்பூங்கா கலைஞர் வார்ப்பை
தொகுத்துரைத்த செந்தமிழின் தொண்டைப் போற்று!

அன்புடன்,
பாவலர் அறிவரசன், திருலோக்கி

குறுந்தொகையில் கார்கால நிகழ்வுகள்

ஆ. வாசுகி
அண்ணாமலைநகர்

மனித வாழ்வை அடிப்படையாகக் கொண்டு எழுந்த இலக்கியங்களில் காலத்தை வென்று நிலைத்திருப்பது சங்க இலக்கியங்களாகும். அவற்றுள் 'நல்ல' என்ற அடைமொழியுடன் விளங்குவது குறுந்தொகை ஆகும். சங்க இலக்கியம், நில அடிப்படையில் காலத்தையும், இயற்கை மாற்றங்களையும், அகவாழ்க்கை முறைக்ளையும் கூறுகின்றது. எல்லா காலமும் எல்லா நிலத்துக்கும் பொதுவாக உண்டு என்றாலும் முல்லைக்குரிய காலமாக, கார்காலம் கூறப்படுகிறது. அவ்வகையில் குறுந்தொகையில் கார்காலத்தில் இடம் பெறும் தலைமக்களது வாழ்க்கை நிகழ்வுகள் குறித்து ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

கார்காலம்

கார்காலம் என்பது மழை பெய்யுங்காலம். அஃது ஆவணித் திங்களும், புரட்டாசித் திங்களும் ஆகும். தொல்காப்பியர் முல்லைத்திணைக்குரிய காலத்தை,

'காரும் மாலையும் முல்லை' - தொல். பொருள்.அகம். 6

என வரையறை செய்துள்ளார்.

கார்காலத்திற்குரிய இயற்கை நிகழ்வுகள்

முத்துவீரியம் காலங்களுக்கான இயற்கை நிகழ்ச்சிகளைத் தொகுத்துக் கூறுகின்றது. அவை வாடையடித்தல், மயில், கேகயம், இந்திர கோபம் தோன்றி மகிழ்தல், அன்னம், கிளி, மயில் அகன்று வருதல், காந்தள், கொன்றை, காயா, தாமரை மலர்தல் போன்றவையும், மாலைப்பொழுதிற்குரிய இயற்கை நிகழ்வாகக் குவளை மலர்தல், பறவை சத்தமிடல், கன்றை நினைத்துக் கறவைப் பசுப் போதல், தாமரைக் கூம்பல் போன்றவையும் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறுந்தொகை

குறுந்தொகையில் கார்காலம் குறித்து 45 பாடல்கள் இடம் பெற்றுள்ளன.

தலைவன் கூற்று	-	6
தலைவி கூற்று	-	30
தோழி கூற்று	-	7
செவிலி கூற்று	-	2

அவற்றுள் தலைவி ஆற்றியிருக்கும் பாடல்கள் அதிகம் இடம் பெற்றுள்ளன.

வினைமுற்றி மீளும் தலைவன் இயற்கையிடம் கூறியது

தலைவியைப் பிரிந்த தலைவன், நீர் வளம் கொண்டதான அகன்ற முல்லை நிலத்துப்பாற்பசுக்கள் இல்லங்களை நோக்கி வருகின்ற, ஒளி இழந்த மாலைக் காலத்தில் நீ உன்னுடைய சிறிய வெள்ளிய அரும்புகளால் புன்னகையைக் கொண்டுள்ளாய். இது உனக்குத் தகுதியுடையதாகுமா என்று முல்லை மலரைப் பார்த்துக் கேட்பதாக அமைகிறது. இதனை,

கார்புறந்தந்த நீருடை வியன்புலத்துப்
பல்ஆ புகுதரும் புல்லென்மாலை
முல்லை வாழியோ முல்லை நீநின்
சிறுவெண் முகையின் முறுவல் கொண்டனை
நகுவை போலக் காட்டல்
தகுமோ மற்றிது தமியோர் மாட்டே – குறுந். 162

என்ற பாடலடிகள் வெளிக்காட்டுகின்றன.

தலைவன் தேர்ப்பாகற்குக் கூறியது

முல்லை நிலத் தன்மையையும், தலைவியைக் காண்பதற்கு உரிய நேரத்தில் தேரை விரைந்து செலுத்திய தேர்ப்பாகனின் திறமையையும், தலைவன் பாராட்டுவதை, நெடுந்தூர வழியில் செல்லோமாயின் பெரிய தோளையுடைய தலைவிக்குத் துன்பத்தை இன்று நீக்கமாட்டோம் என்று நன்மை விரும்பி நினைத்த மனத்தையுடையாய் ! பருக்கைக் கற்களையுடைய மேட்டு நிலம் பிளக்கும்படி போய்ச் சேற்று நிலத்தும், பாலைநிலத்தும்

புதுவழியை உண்டாக்கிய அறிவுடைய தேர்ப்பாகனே ! நோயினால் வருந்தி வாழும் தலைவியை இறந்துபடாமல் மீட்டுத் தந்தமையால் இன்றைக்குத் தேரையா செலுத்தி வந்தனை? தலைவியையே தந்தாய் என்று தலைவன் தேர்ப்பாகனின் திறமையைப் பாராட்டி உரைத்தான். இப்பாராட்டுதல் மூலம் தலைவியைக் கண்ட மகிழ்ச்சிப் புலப்படுகிறது.

தலைவி தன் துயரத்தைக் கூறுதல்

பிரிந்து சென்ற பசுக்கள் மீண்டும் மன்றம் வருதலைக் கன்றுகள் எதிர்நோக்கி வருந்தியிருத்தல் போல பிரிந்த தலைவர் இல்லத்திற்குத் திரும்பி வருதலைத் தலைவி எதிர்பார்த்து மனம் வருந்தியிருத்தலை,

பல்ஆ நெடுநெறிக்கு அகன்று வந்தெனப்
புன்தலை மன்றம் நோக்கி மாலை
மடக்கண் குழவி அலம்வந் தன்ன
நோயேம் ஆகுதல் அறிந்தும்
சேயர் தோழி சேய்நாட் டோரே – குறுந். 64

என்பர்.

தலைவி கார்ப்பருவம் கண்டு ஆற்றியிருத்தல்

பருவங்கண்டு ஆற்றாள் எனக் கவன்றத் தோழிக்கு ஆற்றுவல் என்பது படக் கூறியது.

பெருந்தண் மாரிப் பேதைப் பித்திகத்து
அரும்பே முன்னும் மிகச்சிவந் தனவே
யானே மருள்வென் தோழி பானாள்
இன்னும் தமியர் கேட்பின் பெயர்த்தும்
என்ஆ குவர்கொல் பிரிந்திசி னோரே
அருவி மாமலைத் தத்தக்
கருவி மாமழைச் சிலைதரும் குரலே – குறுந். 94

எனும் பாடல் மூலம் பெரிய குளிர்ச்சியுடைய மழைக் காலத்துக்குரிய, அறிவின்மையையுடைய பிச்சியின் அரும்புகள் மாரிக்காலத்திற்கு முன்பேயே மிகுதியும் சிவந்து காணப்படுகிறது. அதனைக் கண்டு யானோ கார்ப்பருவம்

என்று மயங்குவேன்? மயங்கேன். ஆயினும் பிரிந்து என்பால் இப்பொழுதும் மீண்டு வாராது தனித்திருப்பவராகிய தலைவர், அருவியானது பெரிய மலையிலே தத்தி விழும்படி, தொகுதியாகிய பெரிய மேகங்கள் முழங்கும் ஓசையை நடு இரவில் கேட்பாராயின் பிரிவுத் துயரால் மேலும் என்ன நிலையினை எய்துவரோ? எனக் குறிப்பிடுகிறாள். இதன் மூலம் தலைவி இயற்கையை நம்பாமல் தலைவன் கூறிச்சென்ற வார்த்தையை நம்பி அதற்கு முக்கியத்துவம் அளிப்பதைக் காணலாம்.

தலைவன் இடி முழக்கம் கேட்டு சென்ற வினை முடியாமல் மீள்வரோ என்னும் கருத்து புலப்படுவதையும், 'யானே மருள்வேன்' என்றமையால் யான் வருந்தாமல் ஆற்றியிருப்பேன் என்னும் குறிப்பு வெளிப்படுதலையும் காணலாம்.

கார்காலம் கண்டு தலைவி வருந்துதல்

ஆர்கலி ஏற்றொடு கார்தலை மணந்த
கொல்லைப் புனத்த முல்லை மென்கொடி
எயிறுஎன முகையும் நாடற்குத்
துயில்துறந் தனவால் தோழிஎன் கண்ணே - குறுந். 186

இப்பாடல் மூலம் மிகுந்த முழக்கத்தையுடைய இடியேற்றோடு கார்காலமும் வந்து கூடின. முல்லை நிலத்திலுள்ள முல்லை மெல்லிய கொடி பற்களைப் போல, அரும்பும் நாட்டையுடைய தலைவன் வரவில்லை என்ற வருத்தத்தால் அவள் கண்கள் தூக்கம் இழந்து தவிப்பதாகக் கூறப்படுகிறது.

கார்ப்பருவம் காட்டி, தலைவன் வருவான் எனத் தலைவியைத் தோழி தேற்றுதல்

சுவரில் கோடிட்டு தலைவன் மீண்டும் வரும் நாளை எண்ணிக் கணக்கிட்டு அணிகலன் நெகிழும்படி அழுது கொண்டிருக்கும் தலைவியிடம் தோழி கார்காலம் வந்ததாகக் கூறித் தேற்றுவதை,

வீங்குஇறை நெகிழ விம்மி ஈங்கே
எறிகண் பேதுறல் ஆய்கோடு இட்டு

வாயபற்றுநின் படர்சேண் நீங்க
வருவேம் என்ற பருவம் உதுக்காண்
தனியோர் இரங்கும் பனிகூர் மாலைப்
பல்ஆன் கோவலர் கண்ணிச்
சொல்லுவ அன்ன முல்லைவெண் முகையே — குறுந். 358

என்பர். தோழி, தலைவியிடம் தலைவன் வாய்ச்சொற்களை நம்புவாயாக, நின் துன்பம் நெடுந்தொலைவு நீங்கும்படியாக மீண்டு வருவேன் என்று தலைவர் கூறிய கார்ப்பருவம் இதோ வரக்காண்பாய் என்று முல்லையினது வெள்ளி அரும்புகள் மலர்வதைக் காட்டுகின்றாள்.

முடிவுரை

தலைவி கூற்றுப் பாடல்களில் தலைவன் கூறிச் சென்ற பருவம் வந்தும் தலைவன் வரவில்லை என்பதால் என் துயரை அவருக்குச் சென்று உணர்த்துவார் எனின், அவர் மீண்டு வரத்தூண்டுதலாயிருக்கும் என்று கூறுதல், கார்காலம் கண்டு அவை கார்காலம் என நம்பமாட்டேன் என்று உறுதி கூறுதல், தலைவன் பிரிவினால் எல்லா பொழுதுகளும் துன்பம் தருவதாகவும், தூங்காதிருப்பதாகவும், முல்லை மலர்கள் தன்னைக் கண்டு சிரிப்பதாகவும் கூறல், என்நிலை நினைத்து கவலைப்படாத தலைவர் வந்தாலும், வராவிடின் நமக்கு எத்தகைய உறவினராவர். அவர் வருவதற்கு முன் இறந்துபடுவதாகக் கூறலும், தலைவின் கூற்றுப்பாடல்களில் தலைவியைக் காணவிரும்புவதால் தேர்ப்பாகனிடம் தேரை விரைந்து செலுத்தச் சொல்லுதல், தேர்ப்பாகனைப் பாராட்டுதலும், தோழி கூற்றுப் பாடல்களில் பருவம் காட்டி தலைவன் விரைந்து வருவான் என்று கூறுதலும், தலைவி கார்காலம் கண்டு தலைவன் வரவில்லை என வருந்தும் போது இது கார்காலம் அன்று என்று கூறி தலைவியைத் தேற்றுதலும் கார்கால நிகழ்வுகளாகக் குறுந்தொகையில் இடம் பெறுகின்றன.

ஆல்

ஆறுவிரல் ஐம்பொறி

ஆல் என்ற சொல்லுக்கு ஆலமரம், நஞ்சு, மூன்றாம் வேற்றுமை உருபு, அசைநிலை முதலிய பொருள்கள் உண்டு. செந்தமிழ் இலக்கணத்தில் மூன்றாம் வேற்றுமை உருபுகள் ஆல், ஆன், ஓடு, ஒடு என்பனவாம். இதனை,

மூன்றா வதனுரு பாலா னோடொடு....

என்ற நன்னூல் 297ஆம் நூற்பாவின் வழி அறியலாம்.

ஆல், மின், அம்ம, கொல், மன் முதலியவை செய்யுளில் பொருளின்றி நிற்றலால் அசைநிலை எனப்படும். முன் கூறிய மூன்றாம் வேற்றுமை உருபுகளிலும் பின் கூறிய அசை நிலைகளிலும் ஆல் என்பது உள்ளதை நோக்குக.

செய்யுட்களில் ஆல் வரும் போது அது மூன்றாம் வேற்றுமை உருபா? அசை நிலையா? என்பதை அறிந்தால் தான் அச்செய்யுளின் பொருளை நன்கு தெரிந்து கொள்ளமுடியும்.

வானம் உளதால் மழையுளதால் மண்ணுலகில்

தானம் உளதால் தயையுளதால்..... – ஔவையார்

இச்செய்யுளில் உள்ள நான்கு ஆல்களும் மூன்றாம் வேற்றுமை உருபாகும்.

இம்மை பயக்குமால் ஈயக் குறைவின்றால்

தம்மை விளக்குமால் தாமுளராக் கேடின்றால்.... – நாலடியார், 132

இச்செய்யுளில் ஆல்கள் நான்கும் அசை நிலையாகும். பொருளற்ற இந்த நான்கு ஆல்களையும் நீக்கிவிட்டுப் பாருங்கள்.

இம்மை பயக்கும் ஈயக் குறைவின்று

தம்மை விளக்கும் தாமுளராக் கேடின்று.

என்ன வியப்பு? ஆல்களை நீக்கியவுடன் எளிதாகப் புரிகிறதே.

திருக்குறளில் காணப்படும் சில ஆல் என்னும் அசைநிலைகளைக் குறட்பா எண்ணுடன் காண்போம்.

பழுத்தற்றால் - 216. மரத்தற்றால் - 217. நாடாமால், ஊராமால் - 397 தினப்பொருட்டால், விலைப் பொருட்டால் - 256. தன்துணை இன்றால், பகை இரண்டால் - 875. அற்றால் - 943. விளித்தற்றால் - 894. இன்றால், உய்யாதால் - 966. அன்றால் - 993. வைத்தற்றால் - 840.

இவற்றில் ஊராமால், நாடாமால் என்பவற்றிலுள்ள ஆல்களை நீக்கிப் பாருங்கள், ஊராம், நாடாம், ஆகா ! மிக எளிதாக அறிய முடிகிறதே. இது போன்று மற்றவற்றிற்கும் ஆல் நீக்கி, பொருள் அறிக.

திருக்குறளில் காணப்படும் சில ஆல் என்னும் மூன்றாம் வேற்றுமை உருபுகளைக் குறட்பா எண்ணுடன் காண்போம்.

வருதலால் - 11. இன்சொலால் - 91

காலத்தினால் - 102. நாவினால் - 129. ஒப்புரவினால் - 220. எய்தலால் - 265, கள்ளத்தால் - 282. உள்ளத்தால் - 194, 309. ஆகூழால் - 371. போகூழால் - 371, தன்சொலால் - 387. கேள்வியால் - 418. வினைவகையால் - 514. சுற்றத்தால் - 525. கருவியால் - 537. தன்பதத்தால் - 548, ஒற்றினால் - 588. பெரும்பொருளால் - 732, செவிலியால் - 757, பகைவரால் - 817, குறித்தமையால் - 817, கையால் - 894, ஒருவரால் - 1004, பொருட்டால் - 1017.

வேறுபாடு அறிவதற்கே வேற்றுமை உருபுகள் உண்டாயின. எனவே இவற்றில் மூன்றாம் வேற்றுமை உருபான ஆல் நீக்கப்பட்டால் பொருள் புரிவதில்லை. பகைவரால் என்பதிலுள்ள ஆல் நீக்கப்பட்டால் பகைவர் என்றாகி பொருள் வேறுபாடு தெரிவதில்லை. எனவே மூன்றாம் வேற்றுமையின் ஆல் உருபை நீக்கிப் பார்க்க வேண்டா.

திருக்குறளில் மட்டுமல்ல மற்ற இலக்கியங்களிலும் அசை நிலை ஆல்களும் மூன்றாம் வேற்றுமை உருபான ஆல்களும் அமைந்துள்ளன. இவற்றுக்கிடையே உள்ள வேறுபாடுகளைத் தெரிந்து கொண்டு இலக்கியங்களைப் பொருளறிந்து கற்போமாக.

திருக்குற்றாலத் தலபுராணத்தில் பெரிய புராணச் செய்திகள்

சா. ஜெகன் அண்டோ திலக்
திருப்பனந்தாள்

செயற்கரிய செயல்கள் பல செய்த அடியவர்களின் வாழ்க்கை வரலாற்றை உலகறியும் வண்ணம் எடுத்தியம்பிய நூல் பெரிய புராணம் ஆகும். இந்நூலில் கூறப்பட்டுள்ள அறுபத்து மூன்று நாயன்மார்களின் வாழ்வில் நடந்த அற்புத நிகழ்ச்சிகளை, புராண ஆசிரியர்கள் தங்களுடைய தலபுராணங்களில் உவமை கூறுவதற்காகப் பயன்படுத்தி வந்துள்ளனர். அவ்வகையில் திரிகூடராசப்பக் கவிராயர் இயற்றிய திருக்குற்றாலத் தலபுராணத்தில் எடுத்தாளப்பட்டுள்ள பெரிய புராணச் செய்திகளை வெளிக்காட்டுவதாக இக்கட்டுரை அமையவுள்ளது.

திருஞானசம்பந்தர்

தேவர்களையும் ஏழுலகங்களையும் ஈன்று கருணையே திருவடிவமாகக் கொண்ட உமாதேவியார் சிவபெருமான் அருளிய வண்ணம் பிள்ளையார் அருகில் சென்று அணைத்தெடுத்துத் தமது திருமுலைப்பாலினைப் பொற்கிண்ணத்தில் கறந்து, எண்ணுதற்கரிய சிவஞானமாகிய அமுதத்தைப் பாலுடன் குழைத்தருளினார். அத்தகைய உயர்ந்த பாலானது சம்பந்தருடைய வாயில் பாய்ந்தது போல் ஆத்திரேயன் என்பான் மீது சண்பக வனத்தின் தென்றல் பாய்ந்ததாக ஆசிரியர்,

மால்பாய்ந்த மறைவன்மேற் றிரிகூட வரை வசந்தக்
கால்பாய்ந்த தென்கேனோ கவுணியன்வாய்க் கவுரிமுலைப்
பால்பாய்ந்த தென்கேனோ

எனும் பாடல் வரிகள் மூலம் குறிப்பிட்டுள்ளார்.

திருநீலகண்ட நாயனார்

சிவபெருமான் சிவயோகி உருவில் திருநீலகண்ட நாயகனாருக்குத் திருவோடு ஒன்றினைக் கொடுத்து அதனைத் தான் கேட்கும் பொழுது திரும்பத்தர வேண்டுமெனக் கூறினார். அத்திருவோட்டினைச் சிவபெருமான் மறையச் செய்து விட்டு, நாயனாரிடம் வந்து திரும்பக் கேட்க, நாயனாரோ காணவில்லை என்று கூறினார். அதனை ஏற்க மறுக்க சிவயோகி அவருடைய மனைவி கையைப் பிடித்துக் கொண்டு திருக்குளத்தில் மூழ்கி எழவேண்டுமென்றார். அவ்வாறே

அவரும், அவருடைய மனைவியும் மூழ்கி எழுகையில் அவர்களது முதுமைப் பருவம் மறைந்து இளமைப் பருவம் பெற்றதைப் போல வட அருவியில் மூழ்கிய யானை, தன் இளைப்புப் பிணி தீர்ந்து மலையைப் போல கருவத்துடன் எழுந்து நின்றதை ஆசிரியர்,

தூங்க லமெனத் துறைமில்வீழ் வாரணந் துயர்நீத்
தோங்க லாமென மதர்த்தெழுந் ததுகிழ வுருவாய்த்
தேங்க லார நீர்த் தடம்படி தில்லை வேட் கோவர்
நீங்க லாதபே ரிளமைபெற் றெழுந்தது நிகர்க்கும்"

எனும் பாடலில் குறிப்பிட்டுள்ளார்.

திருநாளைப்போவார்

புனிதமான மரங்களாக விளங்கும் சண்பகப் பூஞ்சோலையில் ஆண் வண்டுகள் குங்கும மலரில் தேன் உண்டு அதன் மகரந்தத்தால் தம் உரு ஒளிப்பெற்று வெளியே வருவது தில்லைவாழ் அந்தணர்கள் அமைத்த தீக்குழியில் திருநாளைப் போவார், அருள் கூத்தாடும் சிவபெருமான் திருவடிகளை நினைத்து தீயினில் மூழ்கிய போது அவருடைய பொய் உடல் மறைந்து மார்பினில் பூணூலும் சடைமுடியுமுடைய புண்ணிய முனிவர் பெருமானாய்த் தீயினின்று எழுந்ததைப் போன்று இருந்ததாக ஆசிரியர்,

துருக்கமா மலரில் வீழ்ந்து சுரும்பின நறவ மாடி
மருக்கமழ் தாதி னாலே வடிவவே றமைந்த தோற்றம்
திருக்கிளர் தழலின் மூழ்கித் திருநாளைப் போவார் மேனாள்
உருக்கிளர் சைவத் தெய்வ வுருவுபெற் றெழுந்த தாமால்

எனும் பாடல் வாயிலாகக் குறிப்பிட்டுள்ளார்.

திண்ணன்

முழக்கம் செய்யும் யானை தும்பிக்கையிலிருந்து உமிழ்ந்த நீர் திண்ணன் களத்தியப்பர்மேல் உமிழ்ந்த வாய்கலச நீராகவும், யானை உதிர்த்த தழைகளை எல்லாம் அவன் குடும்பியின்று எடுத்து வைத்த நறுமலர்களாகவும், சிதறிய கனிகள் அவன் வாயால் சிறிதுமென்று சுவை பார்த்துத் தெரிந்து வைத்த அவி உணவாகவும் திருக்குற்றால நாதருக்கு ஆனதாக ஆசிரியர்,

திமில வாரண முமிழு நீர் திண்ணனம் பரனார்க்
குமிழு நீரதாத் தழையெலா மவன்சிகை யுகுக்கும்

கமழும் பூவதாச் சிதறிடுங் கனியவன் கனிவாய்

அமிழ்த மாகமென் றளித்திடு மாவிகள்போன் றனவே

எனும் பாடலில் காட்டியுள்ளார்.

சண்டீசர்

சண்டீசர் மணலில் திருக்கோயில் எழுப்பிச் சிவலிங்கத்தை எழுந்தருளச் செய்தார். அவர் அன்போடு சிவபெருமான் திருமுடியின் மேல் மலர்களைச் சாத்தி அருச்சித்து, இனிய பாற்குடங்களை எடுத்து ஆவலோடு திருமஞ்சனம் ஆட்டினார். இச்செயல்களையெல்லாம் குரா மரத்தின் மேலிருந்து கவனித்துக் கொண்டிருந்த எச்சதத்தன், பெருங்கோபத்துடன் கீழே இறங்கி வந்து தன் கையிலிருந்த கோலினால் பல முறை அடித்தான். ஆனால் சண்டீசரோ அடியை உணராது பால் அபிடேகம் செய்வதிலேயே ஆழ்ந்திருந்தார். மிகுந்த கோபம் கொண்ட எச்சதத்தன் பாற்குடத்தைக் காலால் எட்டி உதைத்தான். அதனைக் கண்ட சண்டீசர், பாற்குடத்தை உதைத்தது தன் தந்தை என்றும் பாராது அவருடை இரு கால்களையும் துணித்து எறிந்தார் இதனை ஆசிரியர்,

தக்கவே தியன்றவமுஞ் சேய்ஞலூர் மறையவன்பா தகமும் பூசை

புக்க மறைப் பாலகன்வா ணாளழிவு

எனும் பாடல் அடிகளில் எடுத்தியம்பியுள்ளார்.

நமிநந்தியடிகள்

வலிய யானை தனது பெரிய பனை போன்ற தும்பிக்கையால் தண்ணீரை மொண்டு எறியும் போது அத்தண்ணீருடன் திருகூட மலையில் உண்டாகும் மணிகள் ஒளிர்வது, நமிநந்தியடிகள் விளக்கேற்ற நெய் இன்மையால் வருந்தி, செய்வதறியாது தவித்து இறைவனைத் தொழுதார். அப்பொழுது ஆகாயத்தில் ஒரு திருவாக்கு கேட்க, அவ்வாக்கின்படியே அடிகள் குளத்திலிருந்து நீரை எடுத்து வந்து கோயிலிலுள்ள அகலில் ஊற்றி திரியை முறுக்கி எரியவிட்ட விளக்கு ஒளிர்வது போன்று இருந்தது. இதனை ஆசிரியர்,

மூரி வாரண முதுபனைக் கரத்துமொண் டெறியும்

வாரி நீர்தொறும் வரையின்மா மணிகிடந் திமைப்ப

நாரி பாகர்மெய் யன்பரா நமிநந்தி யடிகள்

நீரின் மேல்விடு நிரைசுடர் விளக்கினை நிகர்க்கும்

எனும் பாடல் வரிகளில் குறிப்பிட்டுள்ளார். மேற்குறிப்பிட்டுள்ள செய்திகளை நோக்கும் போது திரிகூடராசப்பக் கவிராயருக்கு பெரிய புராணத்தின் மீது உள்ள ஈடுபாட்டை நன்கு அறிய முடிகிறது.

குறுந்தொகை காட்டும் பொழுது போக்குகள்

முனைவர் சோ. முத்தமிழ்ச்செல்வன்
சிவகாசி

சமுதாயத்தில் மகிழ்ச்சி நிலவப் பொழுது போக்குகள் மிகவும் இன்றியமையாதன. சங்க கால மக்கள் தங்கள் ஓய்வுப் பொழுதினைப் பயனுள்ள வகையில் மகிழ்ச்சி தரும் பொருட்டும், உடல்நலம் ஓம்பும் பொருட்டுமே செலவழித்தனர். பொழுதுபோக்குகள் எண்ணில் அடங்கா. பண்டைக் காலத்தில் பலவகையான பொழுது போக்குகளைத் தமிழ்மக்கள் கொண்டிருந்தனர் என்பதனைக் குறுந்தொகைப் பாடல்கள் தெரிவிக்கின்றன. குறுந்தொகை கூறும் பொழுது போக்குகளாவன : 1. விழாவிற்குச் செல்லுதல் 2. மகளிர் தெப்பம் கொண்டு நீராடல் 3. ஆடவர் பரத்தையோடு நீராடல் 4. மகளிர் விளையாட்டுகள் 5. சிறுவர் விளையாட்டுகள் என்பனவாகும். இவற்றை விரிவாக இக்கட்டுரை எடுத்துரைக்கிறது.

விழாவிற்குச் செல்லுதல்

பழங்காலத்தில் சமுதாயத்தினர் இன்பம் அடையவே விழாக்கள் கொண்டாடப்பட்டன. விழாக் காலங்களில் வீரர்கள் விளையாட்டுப் போர் நிகழ்த்தலும், மகளிர் அவர்களுடன் துணங்கைக் கூத்தாடி மகிழ்தலும் உண்டென்பதை ஔவையார்,

துணங்கை நாளும் வந்தன அவ்வரைக்
கண்பொர மற்றதன் கண்ணவர்
மணங்கொளற் சிவரும் மள்ளர் போரே - குறு. 364:6-8

என விளக்கிக் கூறுகிறார். தலைவன் தலைவியர் தம் நட்பு மென்மேலும் வளர இவ்விழாக்கள் பெரிதும் பயன்பட்டன. இதனையே,

களவுநெறிக்கு இசைந்த நம்சமுதாயம் அந்நெறி
வளரவேண்டிய சூழ்நிலையையும் வகுத்து உதவிற்று

(வ.சுப. மாணிக்கம், தமிழ்க்காதல், ப. 126) என்பார் வ.சுப. மாணிக்கம்.

சங்க காலத் தலைவி முன்பு நடைபெற்ற விழாவில் தான் தலைவனைச் சந்தித்ததனை நினைவு கூர்ந்து தோழியிடம் உரைக்கும் பொழுது, பேரூர் கொண்ட வார்கலி விழவின் (குறு. 223 : 1) செல்வோம் செல்வோம் என்று கூறினாய். நாம் அன்று விழாவிற்குப் புறப்படுகையில் நிமித்தங்களும் நல்லனவாக இருந்தன. ஆகையால் தலைவனைக் கண்டோம். அவனும் பல புனைந்துரைகளைக் கூறி என் நலனைக் கொள்ளை கொண்டான். ஆதலால் நான் நலனிழந்து நிற்கிறேன் என்கிறாள். இப்பாடலிலிருந்து பழங்காலத்தில் மக்களின் பொழுது போக்கிற்காக மிக்க ஆரவாரமுடைய விழாக்கள் நடைபெற்றன என்பதும், அவ்விழாக்களில் தலைவன் தலைவியர் சந்தித்துக் கொண்டனர் என்பதும், காதலித்து அன்பு செய்தனர் என்பதும் பெறப்படுகிறது.

மகளிர் தெப்பம் கொண்டு நீராடல்

மகளிர் வாழை மரத்தினால் தெப்பம் செய்து கொண்டு நீராடுதல் வழக்கம். தலைவியும், தோழியும் மிக்க அன்புடையவர்கள். அவர்கள் ஒருங்கே நீராடும்பொழுது தலைவன் காண்கிறான். தோழியின் வாயிலாகத் தலைவியை அடைய முயல்கிறான். அதனால்,

தலைப்புணைக் கொளினே தலைப்புணைக் கொள்ளும்
கடைப்புணைக் கொளினே கடைப்புணைக் கொள்ளும்
புணைகை விட்டுப் புனலோ டொழுகின்
ஆண்டும் வருகுவன் போலும் - குறு. 222 : 1-4

என்கிறான். தலைவி, தோழியின் செயல் ஒற்றுமையை நேரில் கண்டதும் தோழியின் மூலம் தலைவியை அடைந்து விடலாம் என நம்பிக்கை கொள்கிறான். இப்பாடலில் தலைவியும், தோழியும் தெப்பம் கைக் கொண்டு நீராடுகிறார்கள். ஆதலால் மகளிர் பழங்காலத்தில் வாழை மரத்தினில் செய்த தெப்பத்தைக் கொண்டு நீர்ச்சுனையில் நீராடி மகிழ்தல் வழக்கம் என்பது தெரிகிறது.

ஆடவர் பரத்தையரோடு நீராடல்

பரத்தையர் இல்லம் சென்றுவந்த தலைவனைத் தோழியும், தலைவியும் மட்டுமே வெறுத்து ஒதுக்குவர். வாயில் மறுப்பாள் தோழி. ஆடவர் பரத்தையருடன் தங்கியிருத்தலைப் பழந்தமிழ்ச் சமுதாயத்தினர் இழிவாகக்

கருதவில்லை. ஆதலால் ஆடவர் பரத்தையருடன் நீராடினர். நீர் விளையாட்டுக்குரிய கோலத்துடன் வந்த தலைவனைக் கண்ட தோழி வாயில் மறுக்கிறாள்.

உடுத்துந் தொடுத்தும் பூண்டுஞ் செரீஇயும்
துழையணிப் பொலிந்த ஆயமொடு துவன்றி
விழவொடு வருதிநீயே -குறு. 295:1-3

எனக் கூறித் தலைவனை வாயில் மறுக்கிறாள் தோழி. இப்பாடலால் ஆடவர் பரத்தையருடன் நீராடிய வழக்கம் புலனாகிறது.

மகளிர் விளையாட்டு

பண்டைக்கால மகளிர் தமக்குக் கிடைக்கும் ஓய்வு நேரங்களை மகிழ்ச்சியான விளையாட்டுகளில் ஈடுபடுத்தினர். சங்க கால மகளிரின் விளையாட்டுகள் சிலவற்றைக் குறுந்தொகைப் பாடல்கள் கூறுகின்றன. அவையாவன : 1. அடும்ப மலர் பறித்து விளையாடல், 2. நண்டுடன் விளையாடல் 3. சிற்றிலிழைத்து விளையாடல் 4. பாவை செய்து விளையாடல் என்பனவாகும்.

சிறுவீடு கட்டல்.... பாவையாடல் முதலியன,
மகளிர் பின்னர் பெறப்போகும் வளர்ச்சிக்குத்
தாய்மை உணர்ச்சிக்கு முன்கூட்டியே பெறும்
பயிற்சியாயின -வெ.சு. அழகப்பன், சிலம்பன் முதல் ஒலி, ப. 49

என்பர்.

அடும்ப மலர் பறித்து விளையாடல்

அடும்பு என்பது நெய்தல் நிலத்தில் வளரும் ஒருவகைக் கொடியாகும். அடும்பின் மலர்கள் குதிரையின் மாலையில் உள்ள மணிகள் போன்று காணப்படும். இதனைப் பறித்து மகளிர் விளையாடுவதை நம்பிக்குட்டுவன் என்ற புலவர்,

.... அடும்பின்
தார்மணி யன்ன வொண்பூக் கொழுதி
ஒண்டொடி மகளிர் வண்டலயரும் -குறு. 243:1-3

எனக் குறிப்பர். ஈரம் உலராத அவலை இடித்து மகளிர் உலக்கையை

நெற்பயிருடைய வயலில் வைத்துவிட்டு நீரில் மூழ்கி விளையாடிக் களிப்படைவதைக் குன்றியன் என்னும் புலவர் தம் பாடலில் கூறுவர் (குறு. 238 : 1-3)

நண்டுடன் விளையாடல்

நண்டு மருதநிலக் கருப்பொருள்களுள் ஒன்று. இதற்குக் 'கள்வன்' என்றும், 'அலவன்' என்றும் வேறுபெயர்கள் உண்டு. நண்டினைப் பற்றிய பாடல்கள் 'கள்வன் பத்து' (ஐங். பா. எண்கள் 21 – 30) என்ற தலைப்பில் ஐங்குறுநூற்றில் இடம் பெற்றுள்ளன. சங்க கால மகளிர் நண்டினைக் கண்டு அதனைப் பலவிடங்களிலும் ஓடவிட்டு அலைத்து விளையாடி மகிழ்வர். இதற்கு அலவனாட்டுதல் என்று பெயர்.

மகளிர் சிலர் கடற்கரையில் ஒரு நண்டினைக் கண்டு அதை அங்குமிங்கும் ஓடவிட்டுத் துன்புறுத்துகின்றனர். மகளிரின் தொல்லைக்குட்பட்ட நண்டினை அங்கு எதிர்பாராதவிதமாக வந்த அலை ஒன்று அடித்துச் சென்றுவிடுகிறது. இக்காட்சியைக் கண்ட தும்பிசேர்கீரன்,

> **ஓரை மகளிர் ஓராங் காட்ட**
> **ஆய்ந்த வலவன் துன்புறு துனைபரி**
> **ஓங்குவரல் விரிதிரை களையும்** – குறு. 316 : 5-7

என நெய்தல் நிலக் காட்சியை விரித்துரைக்கிறார்.

மற்றொரு பாடலில், மகளிர் அடும்பின் மலரையும், நெய்தல் மலரையும் விரவித் தொடுத்த மாலையணிந்து நீரில் குதித்து விளையாடுகின்றனர். பின்னர் அம்மகளிர் நீர் ஒழுகிய கூந்தலுடன் கரைக்கு வர அவ்விளையாட்டு மகளிரைக் கண்ட நண்டு அஞ்சிக் கடலுக்குள் ஓடி மறைகிறது (குறு. 401 : 1-4). இதனை அம்மூவன் தம்பாடலில் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு மகளிர் நண்டுடன் விளையாடியதைக் குறுந்தொகைப் பாடல்கள் காட்டுகின்றன.

சிற்றிலிழைத்து விளையாடல்

மகளிர் கடற்கரைச் சோலையில் சிறுவீடு கட்டி விளையாடுதல் பண்டைய வழக்கம். இவ்வழக்கத்தினைத் தலைவியின் வாயிலாக வெளிப்படுத்துகிறார் ஆசிரியர். தலைவன் சிறைப்புறத்திருக்கத் தலைவி

தோழியிடம், தான் தலைவனுடன் நட்புக்கொண்ட நாளை வெளிப்படக்கூறி விரைவில் வரைதல் வேண்டும் என்பதனைக் குறிப்பாக உணர்த்துகிறாள்.

கடலாடு மகளிர் கான லிழைத்த
சிறுமனைப் புணர்ந்த நட்பே — குறு. 326:2-3

எனச் சிற்றிலிழைத்து விளையாடும் பொழுது தலைவனின் நட்பு உண்டாகியது என்கிறாள் தலைவி. சிற்றிலிழைத்தலைக் கலித்தொகைப் பாடல்,

முற்றிழை ஏஎயுர் எமநல்லாய் நீயாடுஞ்
சிற்றில் புனைகோ சிறதென்றாள் — கலித். 111:8-9

எனக் குறிப்பிடுகிறது.

பாவை செய்து விளையாடல்

பண்டைக்காலப் பெண்கள் நறுமணப் பொடிகளாலும், கோரைப் புல்லாலும் பாவை செய்து விளையாடுவது வழக்கம். இவ்வழக்கத்தினைப் பல சங்கப் பாடல்கள் உணர்த்துகின்றன (ஐங். பா. 128). தலைவி பாவையிடம் மிக்க அன்பு கொண்டு அதனை விட்டுப் பிரியாது தன் தோழியருடன் சேர்ந்து இருந்து விளையாடுவாள். அத்தகையவள் பாவையை விட்டுப் பிரிந்து தலைவன் நினைவால் இருப்பது கண்டு,

தாதில் செய்த தண்பனிப் பாவை
காலை வருந்தும் கையாறு ஓம்பு — குறு. 48:1-2

எனத் தோழிகள் அனைவரும் தலைவியிடம் கூறுகின்றனர். அதைக் கேட்டும் தலைவி ஒன்றும் செய்யாது தலைவன் நினைவாகவே இருக்கிறாள் எனத் தலைவி நிலைகண்டு வருந்தி உரைக்கிறாள் தோழி. பூங்கணுத்திரையாரின் இப்பாடல் பெண்கள் பலவகையான வாசனைப் பொடிகளால் மணமும், குளிர்ச்சியும் மிக்க பாவை செய்து விளையாடுவர் என்பதைப் புலப்படுத்துகிறது.

தலைவியை விரும்பும் தலைவன், தலைவி விளையாடுவதற்குத் தானே பாவை செய்து கொடுத்தல் வழக்கம். தலைவியைச் சந்திக்க விடாமல் தலைவனைத் தடுக்கிறாள் தோழி. இதனால் வெகுண்டெழுந்த தலைவன் தான் இதுவரைத் தலைவிக்கு என்னென்ன செய்தான் என்பதை எடுத்துரைக்கிறான். அவ்வமயம் தான் மிக வருந்தி,

பணைத்தோள் குறுமகள், பாவை தைஇயயும்
பஞ்சாய்ப் பள்ளம் சூழ்ந்தும் - குறு. 276:1-2

பாவை செய்து கொடுத்ததைக் கூறுகின்றான். நீர் நிறைந்துள்ள பள்ளங்களில் எல்லாம் சுற்றிப் பஞ்சாய்க் கோரை எடுத்துவந்து அதில் பாவை செய்து தலைவி விளையாடுவதற்குக் கொடுத்தேன் எனத் தன் ஆற்றாமையை வெளியிடுகிறான் தலைவன்.

சிறுவர் விளையாட்டுகள்

சங்க காலத்தில் ஆடவர், மகளிர் தவிர சிறுவர்களும் சமூதாயத்தில் இன்றியமையாத இடத்தினைப் பெற்றிருந்தனர் என்பதைக் குறுந்தொகைப் பாடல்கள் உணர்த்துகின்றன. சிறுவர் 'யானைக்கன்றுடன் விளையாடல்', 'தேர் இழுத்து மகிழ்தல்', 'புலி புலி எனப் பூசலிடல்' போன்ற விளையாட்டுகளில் ஈடுபட்டு மிக்க மகிழ்ச்சி அடைந்தனர்.

யானைக் கன்றுடன் விளையாடல்

சிறுவர்களின் துணிச்சலைக் கண்டு 'இளங்கன்று பயமறியாது' என்பார்கள் பெரியோர்கள். அதற்கிணங்கச் சங்க காலத்தில் சிறுவர்கள் அஞ்சாது யானைக் கன்றுடன் விளையாடி இருக்கின்றனர். குறமகள் பெற்ற புதல்வர்களோடு யானைக் கன்று விளையாடிய நிகழ்ச்சியைக் குறியிறையார்,

முழந்தா விரும்பிடிக் கயந்தலைக் குழவி
நறவுமலி பாக்கத்துக் குறமக ளீன்ற
குறியிறைப் புதல்வரோடு மறுவந்தோடி - குறு. 394:1-3

என்ற பாடலில் கூறுகிறார்.

தேர் இழுத்து மகிழ்தல் - சிறுமாவையம்

சிறுவர், பெரியோர் ஊர்ந்து செல்லும் பெரிய தேரை ஊர்ந்து இன்புற இயலாது என்பதால் அப்பெரிய தேரை நினைத்துத் தச்சன் செய்த சிறிய தேரை இழுத்துச் சென்று இன்புற்றனர். சிறுவர் சிறிய தேரை இழுத்து இன்புற்றதைக் குறுந்தொகையில் தும்பிசேர்கீரன்,

தச்சன் செய்த சிறுமா வையம்
ஊர்ந்தின் புறாஅர் ஆயினும், கையின்
ஈர்த்தின் புறூஉம் இளையோர் – குறு. 61:1-3

எனக் காட்டியுள்ளார். பெரியோர் பெரிய தேரை ஊர்ந்து இன்புறுதல் போலச் சிறுவர் சிறிய தேரை ஈர்த்து மகிழ்ச்சி அடைகின்றனர். சிறுவர்பால் இவ்விளையாட்டு இன்றும் காணப்படுகிறது. பிள்ளைத் தமிழ் நூல்கள் இதனைச் சிறுதேர்ப்பருவம் எனக் குறிப்பிடுகின்றன.

புலி புலி எனப் பூசலிடல்

வேங்கை என்பது குறிஞ்சி நிலத்தில் காணப்படும் ஒரு மரமாகும். வேங்கை விலங்கினங்களுள் புலியைக் குறிக்கும். வேங்கை மரத்தில் மலர்கள் மலர்ந்திருப்பதைக் கண்டால் மகளிரும் சிறுவர்களும் மரத்தின் மேல் ஏறாமல் கீழிருந்தவாறே புலி புலி என மகிழ்ச்சியுடன் ஆரவாரம் செய்து அதனை உலுக்குவார்கள். அவர்கள் அம்மரத்தில் தெய்வம் உறைதல் உண்டு என நம்பியிருந்தனர். இதனையே உ.வே. சாமிநாதையர் தம் குறிப்புரையில் தெய்வம் உறைதலின் வேங்கை மரத்தின் மேல் ஏறாராயினர் (குறு. ப. 497) எனக் குறிப்பிட்டுள்ளார்.

குறிஞ்சி நிலத்தில் மகளிரும் சிறாரும், மரத்தில் ஏறாமலே, கீழிருந்தவாறே செய்யும் ஆரவாரம் கேட்டு வேங்கை மரம் தானே வளைந்து மலர்தரும் என நம்பினர். இருப்பினும் சிறுவர்களிடமே இவ்வழக்கம் பெரிதும் காணப்பட்டது. சிறுவர்கள் இன்ப ஆரவாரத்தைக் கேட்ட கபிலர்,

.... புன்தலைச் சிறாஅர்
மன்ற வேங்கை மலர்பதம் நோக்கி
ஏறாது இட்ட ஏமப் பூசல்
விண்தோய் விடரகத் தியம்பும் – குறு. 241:3-6

எனத் தம் பாடலில் கூறியுள்ளார். இவ்வாறு குறுந்தொகையில் சிறுவர்களுக்கென்றே சில பொழுதுபோக்குகள் காணப்படுகின்றன.

இவ்வாறாக, குறுந்தொகை காட்டும் பொழுதுபோக்குகளாக, விழாவிற்குச் செல்லுதல், மகளிர் தெப்பம் கொண்டு நீராடல், ஆடவர் பரத்தையரோடு நீராடல், மகளிர் விளையாட்டுகள், சிறுவர் விளையாட்டுகள் ஆகியன இடம் பெற்றுள்ளன.

பூவும் பாவும்
(சென்ற இதழ் தொடர்ச்சி)

புலவர் சி. பாண்டுரங்கன்
ஆம்பூர்

வாகை

வாகை, போரில் வென்றவர் அணியும் பூமாலை, மாபெரும் பசுந்தழைக் குடை மீது, பட்டிழைகளை வண்ணம் தோய்த்துச் சிறு கட்டுகளாக உலர்த்தி வைத்தார்களோ? வாகைப்பூவின் வண்ணமும், வடிவும், நாசிக்கு நெடுந்தொலைவு வரை காற்றில் கலந்து வந்து, உவந்து ஏற்கும் வாசம் எனும் நறு மணமும் தாம், என்னே, என்னே ! ஈடும் இணையும் இதற்கு வேறுண்டோ? இம்மரத்தின் அடர் நிழலில், புதிய விதை முளைக்க ஒளி போதுமோ? மக்களின் மனங்களை மலர்கள் வென்றுவிட்ட கொண்டாட்டமல்லவோ, இசைக்கருவியாக, குழந்தைத் தென்றலின் இளங்கையிலும் பேரொலி எழுப்பும் கிலு கிலுப்பையாக, அசைந்து, வெற்றி முரசு கொட்டும் காய்களின் உலர்பொன் நிலை !

வாகை வெண்நெற்று ஒலிக்கும்
வேய்பயில் அழுவம்....... – பெரும்பதுமனார், குறு. 7

மயில் கொண்டை போன்ற வடிவம் கொள் மலர் எனச் சேந்தன் கண்ணன் பாடியுள்ளார் :

குமரி வாகைக் கோலுடை நறுவீ
மடமாத் தோகைக் குடுமியின் தோன்றும்
கான நீளிடை..... – குறு. 347

தோழி, கிழத்திக்கு உடன்போக்கு உணர்த்திய 4 அடிப் பாடலில், 75% அடிகள், (வாகை மலர்களின் கொடைப் பதிவாய் உள்ள) வாகை நெற்றுகளின் ஆரவாரத்தைச் சிலம்பொலிக்கு ஒப்பிடுகின்றன :

அத்த வாகை அமலைவால் நெற்று,
அரிஆர் சிலம்பின், அரிசி ஆர்ப்பக்
கோடை தூக்கும் கானம்...... – குடவாயிற்கீரத்தனார்

வாகை ஒண்பூப் புரையும் முச்சிய

தோகை......... பரி – 14, பதோதிறம் பண் அமைய,

செவ்வேள் பற்றிப் பாடிய கேசவனார், இப்பாடல் அடியில், வாகையின் ஒள்ளிய மலரைப் போன்ற சூட்டை உடைய மயில் என உவமை நயம் வைத்தார். முதன்மை கொண்டோங்கும் வாகையின் பூ, வெற்றிக்குத் தேர்வு, சரியே!

இட்டலியா? வெட்சியா?

நாள் முழுவதும் பார்த்துக் கொண்டிருந்தாலும், யாருக்கும் சலிக்காது! குங்குமத்தைக் குழைத்துப் பிரமன் உருவாக்கிய பூங்கொத்தோ – என வியக்கத் தோன்றும் அடர்பச்சை இலைகள் பின்புலமாக, சிறு குழந்தை நீட்டும் கரம் போல உயர்ந்த சிறுகிளை உச்சியில், பல பூங்கொத்துகள்; ஒவ்வொன்றும் அரைக்கோள வடிவில் உள்ளதால் போலும், இட்டலிப் பூ என்பர் சிறுவர், வேலூர் மாவட்டத்தில்! வெட்சிப்பூ என்கிறது, பல்லாயிரம் அகவை இலக்கியம்! ஒவ்வொரு பூங்கொத்திலும் 40 முதல் 50 வரை நாலிதழ் பூக்கள்! மையத்தில் தொடங்கிச் சிறிய கழித்தல் குறிகள் போலச் சில மஞ்சள் நிற மகரந்த நூல்கள்! ஒவ்வொரு பூவையும் தாங்கி நிற்கும், பெருவிரல் கணுஉயரக்காம்புகள் ! கதிரொளி உணவு ஏற்க, 360 பாகை பகிர்ந்து கொண்டு, எண்திசைப் பங்காளிகளாகக் குடை விரித்தது போல் அணி வகுத்து நிற்கும் மலர்களின் கண்கொள்ளாக் காட்சியே காட்சி! ஆள் உயரத்திற்கு மேல் அடர்ந்து வளர்ந்து ஆண்டிற்கு நான்கு முறை பூக்கும் ! பசு எருவும் தண்ணீரும் பாய்ச்சினால், எந்த ஊரின் வெம்மை, தண்மை எனினும், தாங்கி வளரும் ! செடி நிரம்பப் பூத்தால், முந்நூறு முகச் சிரிப்புகளை, ஒற்றை விநாடி ஒளிப்பிழம்பில் பதித்துக் காட்டியது போல, நிச வண்ணப்படமாய் நிற்கும். ஒருமுறை பூத்தால், ஒரு மாதம் வரை கூட இருக்கும். பூங்கொத்தும் இருக்கும் ! இதனை, ஓரறிவு உயிர் என்றால், மனம் வியந்து வியந்து மகிழ்கிறது. உலகின் பொதுமொழி, இதனை இப்படிக் குறிக்கிறது : SCARLET IXORA பொருள் : நன்கு சிவந்த வெட்சி ! அறிவார்ந்த அடை ! வெட்சிப்பூச்சூடி, அறவழிப் போரின் தொடக்கத்தை அறியச் செய்யும் நிகழ்வுகள், ஏழிரு துறைகள், அடங்கிய வெட்சி, தொல். பொருள், புறத்திணையியலில் அறிமுகம் செய்யப்படுகிறது :

வெட்சி தானே, குறிஞ்சியது புறனே,

.... ஈர் ஏழ் வகையிற் றாகும்!

பூவா, புலியா?

வேங்கை என்னும் சொல், பகாப்பதமாயின், மரம், புலி, நாடு, மலை ஆகியவற்றுள் ஒன்றைக் குறிக்கும். வேங்கை என்னும் சொல், நிரம்பப் பயன் படுத்தப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக, அகநானூற்றில் மட்டும் நாற்பத்தொரு பாடல்களில் வேங்கை என்னும் சொல் உள்ளது. ஒரே பாடலில் இரண்டாம் முறை இச்சொல் பயன்படுத்தாமல் உள்ள ஒற்றுமை, ஆய்ந்தறிந்து தேர்ந்துகொண்டு, மகிழ வேண்டிய படைப்பழகு!

வேங்கைப்பூ, புலியோடு ஒப்பீடு பெறுதல்

புலிஉரி வரிஅதன் கடுப்பக் கலிசிறந்து,
நாட்பூ வேங்கை நறுமலர் உதிர.... – அகம்... 205

பொன்னிறமான பூங்கொத்துகளுடன் விளங்கும், புலி போன்ற வேங்கை மரத்தைக்கண்ட களிறு, அடி மரம் நோக்கிப் பாய்தலை அகம். 227 காட்டுகிறது!

வேங்கைப்பூ கொய்வார், அப்பெயர்கொள் விலங்கின் பெயரைக் கூவுதலை, அகம். 48 எடுத்தியம்புகிறது!

மலர்கள் பூத்துத் தரையில் உதிர்ந்து குவிதல்

..... கானவர்

கிழங்குஅகழ் நெடுங்குழி மல்க வேங்கைப்
பொன் மலி புதுவீ நாஅம்அவர் நாட்டு....." – ஐங்குறு., 208

தலைநாள் பூத்த பொன் இணர் வேங்கை.... – மலைபடுகடாம்

புகர்இணர் வேங்கைவீ கண்டன்ன.... – பெரும்பாண்.

சாரல், அரும்பற மலர்ந்த கருங்கால் வேங்கைச்
சுரும்புஇமிர் அடுக்கம்.... – நற்றிணை, 112

வேங்கை கமழும் எம்சிறுகுடி.... – குறு. 355

எழுந்த சுடர்வீ வேங்கைப் பூவுடைப் பெருஞ்சினை.... – பதி. 41

எரி இணர் வேங்கை.... – பரிபாடல், 19

...............வேங்கை வீ
முற்றெழில் கொண்ட சுணங்கணி பூண்ஆகம்... – கலித்தொகை. 64

விந்தைப் பூக்கள்

தாழிப்பனை, ஒரே முறைதான் பூத்துக் காய்த்துக் கனிந்துதிரும் ! நில நடுக்கோட்டருகே அடர்ந்த கானகத்தில் தோன்றும் ஒருவகை விந்தைப்பூ, ஆள் உயர விட்டம் காட்டித் தரையோடு மலர்ந்து நின்று, பல கல் தூரம் நெடி பரப்புமாம். வண்ணம் வடிவம் ஈர்ப்பமை மலர்களுக்கு, ஒற்றைச் செம்பருத்தி, வாடாமல்லி, கோழிக்கொண்டை, செண்டுமல்லி, சாமந்தி, மார்கழி நீலப்பூ எடுத்துக்காட்டுகள். காலை பத்து மணிக்கு மலரும் பத்துமணிப்பூ, கார்காலத்தில் முல்லை (மாலை) மலர்வது கண்டு பொழுதறிந்த சங்க கால நிகழ்வை நினைவூட்டும் ! நறுமணத்தால் புகழ் ஈட்டும் பூக்களுக்கு எடுத்துக்காட்டு சொன்னால், முந்தி வந்து நிற்பவை, மதுரை மல்லி (கை), ஆம்பூர் முல்லை, சண்பகம், இரோசா, இருவாட்சி முதலாகப் பல. சாதி மல்லியை உச்சியில் நிறுத்திப் புகழும், பழைய மொழி ஒன்று ; பூவோடு சேர்ந்த நாரும் மணக்கும் ! பூக்கள், வாழ்வியலின் பாக்களோடு ஒன்றியவை ! அத்தை அடித்தாளோ, அரளிப்பூச் செண்டாலே, மாமன் அடித்தானோ, மல்லிப் பூச் செண்டாலே? என்னும் பாடல் வினாவிற்கு விடை, இதுவரை எந்தத் தொட்டில் குழந்தையும் கூறவில்லையெனினும், பாவில் கலந்த பூவின் மேலாண்மை கூறப்படுவதை, அறிகின்றோம் ! நற்றிணையில், செவிலி, குழந்தையை அச்சுறுத்திப் பால் சோறு உண்ண வைக்கத் தயாரிக்கப்பட்ட, பூச்சுற்றி பட்டுப் போல் மென்மையாக்கப்பட்ட, கைக்கோலை, நமக்கு அறிமுகம் செய்கின்றார். அதே பாடலில், வீட்டின் முற்றம், முல்லைப் பந்தரால், நிழலும் மணமும் பெற்ற செய்தியும் பதிவானதை அறிந்து, இன்றும் வீட்டின் வடகிழக்கு மூலையில், முல்லை, மல்லிகை வளர்க்கப்படுகின்ற மரபை எண்ணி, மனம் வியக்காமல் இராது ! அப்பாடல்....

நற்றிணை : 110 (போதனார்)

அவ்வடிகள்........

.... புடைப்பின் சுற்றும் பூந்தலைச் சிறுகோல்,

உண் என்று ஓக்குபு பிழைப்ப....

அரிநரைக் கூந்தல் செம்முது செவிலியர்

பரிமெலிந்து ஒழிய, பந்தர் ஓடி,.....

பவழமல்லியின் பாவாக உருவகம் பெற்று உருவான,

பெண்ணினத்துக்கு

உவமையாய்ச் சொன்னீர்

நாணிச் சிவந்தேன் நான்

என்னும் கவிதைப் பார்வைகள் வரிகள் வழி பூவின் நற்குணங்கள், பாவழி, பெண்ணுக்குச் சென்று, பரிணாம தத்துவம் பரிபூரணம் பெறுவதை அறியலாம்!

ஒகேனகல் நீர் வீழ்ச்சியில், காவிரிப் புதுப்புனல் அகன்றும், ஆழ்ந்தும், பொங்கியும், விரைந்தும் வீழும் போது, புகை மண்டலம் போல் மேலெழுந்து நீர், மேகமாகும் அபிநயம் போல, கவிதைகள் போற்றும் பூக்கள், கதைகளிலும் தெறித்து, வீழ்ந்து வாசகரை மகிழ்விக்கும் விந்தை காணக்கிடைப்பதே ! நதிகளின் புது வெள்ளம், மலர்களையும் பொன் துகளையும் அள்ளி வந்து பரப்பிச் செல்வதைக் காப்பியங்கள் பாடும் ! மலர் கொய்தலுக்கோர் காட்டு :

மணிமேகலைதான் மாமலர் கொய்ய
அணிமலர் பூம்பொழில் அகவயிற் சென்றதும்..... – சாத்தனார்

இளமைப் பருவத்தே, மதுரை மாரியம்மன் தெப்பக்குளத்தின் நடுவே, தமிழ்போல் தண்ணிழல் பரப்பி மகிழ்விக்கும் சீர்மேடை அடர்மர நிழலில் அமர்ந்து, வடிவம், வண்ணம், வாசம் நிறைந்த நாகலிங்கப் பூவினைக் கண்ட காட்சி, மனத்தில் பதிவாகி, அப்பூவின் பெயரைப் பாடலில் கேட்டாலோ, படித்தாலோ, மனத்திரையில் வண்ண மலராக வடிவம் காட்டி, நினைவிலும் மணக்கிறதென்றால், பாவில் சேர்ந்த பூவின் விந்தைகள் தாம் என்னே!

காவிரி, பாநாயகி யானாலும், பூவன்றோ உருவகவழி ஆடையாகி, போர்த்தி, அணி செய்து, விந்தை ஓவியமாகின்றது : (சிலம்பு,புகார், கானல் வரி)

பூவார் சோலை மயில் ஆல, வளம் சுட்டி நடக்கும் காவேரியை, மாதவி பாடினாள் இப்படி -

மருங்கு வண்டு சிறந்தார்ப்ப
மணிப்பூ வாடை அதுபோர்த்துக்
கருங்க யல்கண் விழித்தொல்கி
நடந்தாய் வாழி காவேரி

விநோதக் குறிஞ்சி

தென்றலில் மென்மை தோய்த்து, நீலவானில் அந்திநேர வண்ணம் தோய்த்து, தமிழ்ச்சுவை உவமை காட்டத் தேனை ஏந்தி, கார்மேகத்தில் தண்மை தோய்த்து, குறிஞ்சியின் சரிவுகளில் அடுக்கடுக்காக வளர்ந்து, கருங்கோல் உள்ளே கணுக்கள் விட்டு வளர்ந்து, கோடையில் காய்ந்தாலும் ஆண்டுகளின் கணக்கைக் கணுக்களில் அகவையாய்க் காட்டுகின்ற, கோலமிகு குறிஞ்சியில் பூக்கும் பூக்கள், பன்னிரண்டு ஆண்டுக்கொரு முறை மட்டுமே பூக்கின்ற, விநோதப் பூக்கள் ! படைத்தோன் தந்த விந்தைக் கொடை ! மலையெல்லாம் பெரிய தேனடைகளில் தனிப்பூந் தேனாக நிறைந்து வழிய ஈகை செய்ய வரும் குறிஞ்சிப் பூக்களைப் பாக்கள் நிரம்பப் பேசுகின்றன ! நறுங்கார் அடுக்கத்துக் குறிஞ்சி பாடுதலை, மலைபடுகடாம் (359) கூறும், அது பண் வகை, குறிஞ்சி நிலத்தின் இயற்கை வளம் காட்ட வந்த மதுரைக் காஞ்சி (வரி 300) 'கருங்கோற் குறிஞ்சி' என்கிறது !

காா்மலர்க் குறிஞ்சி சூடி..... - மேலது, வரி 613

நற்றிணை, குறுந்தொகை, அகம், புறம் ஆகிய இலக்கியங்கள் இப்பூ பற்றி நவிலும் பாமேற்கோள்கள், கட்டுரைச் சோலை என்னும் நூலில் விளக்கப்பட்டுள்ளன.

பூவும் புவியும்

இரவில் வானத்திரையில், வண்ணக் கோலம் பதிப்பன வாண ஒளிக்கதிர் வான வேடிக்கை ! பகலில், நெஞ்சங்களின் கொண்டாட்டத்தைப் புவித்திரையில் எழுதுவன, பூக்கள் ! வரவேற்பா, வாழ்த்தா, பாராட்டா.... எதுவெனினும், முந்தி நிற்பன பூவணிதாமே ! திருமணத்திலும், பூ சேர்ந்த மாலைகள், பூமணங்கள் மணக்க, அடையாளங்கள் ஆகின்றன. நனவில் மட்டுமல்ல, கனவிலும் பூ நலன் விளைக்கும் :

.... மணமாலை,

அந்தரி சூட்டக் கனாக் கண்டேன் தோழீ, நான் !

- நாச்சியார் திருமொழி (வாரணமாயிரம்)

மணமக்களின் வரவேற்பிலும், கழுத்திலும் கையிலும் அணிசெய்து, அடையாளம் காட்டி, அவர்களுக்கு வாழ்த்துக்களை வரவுவைப்பன, பூக்களே !

அதனால்தான், நீர்ப்பூ, நிலப்பூ, கோட்டுப்பூ, கொடிப் பூவெல்லாம் பாப்பூ ஆகின்றன :

1. மடல் பெரிது தாழை, மகிழினிது கந்தம் ; உடல் சிறியர் என்றிருக்க வேண்டா.....

2. கண்ண் கருவிளை, கார் முல்லை கூர் எயிறு – என்ன் குறமகளாம் ஆறு !

பூக்கள் 99

1. காந்தள்
2. ஆம்பல்
3. அனிச்சம்
4. குவளை
5. குறிஞ்சி
6. வெட்சி
7. செங்கோடு வேரி
8. தேமா
9. மணிச்சிகை
10. உந்தூழ்
11. கூவிளம்
12. எறுழம்
13. சுள்ளி
14. கூவிரம்
15. வடவனம்
16. வாகை
17. குடசம்
18. எருவை
19. செருவிளை
20. கருவிளை
21. பயினி
22. வானி
23. குரவம்
24. பசும்பிடி
25. வகுளம்
26. காயா
27. ஆவிரை
28. வேரல்
29. சூரல்
30. பூளை
31. கண்ணி
32. குருகிலை
33. மருதம்
34. கோங்கம்
35. போங்கம்
36. திலகம்
37. பாதிரி
38. செருந்தி
39. அதிரல்
40. சண்பகம்
41. கரந்தை
42. குளவி
43. கலிமா
44. தில்லை
45. பாலை
46. முல்லை
47. குல்லை
48. பிடவம்
49. மாரோடம்
50. வாழை
51. வள்ளி
52. நெய்தல்
53. தாழை
54. தளவம்
55. தாமரை
56. ஞாழல்
57. மௌவல்
58. கொகுடி
59. சேடல்
60. செம்மல்
61. செங்குரலி
62. கோடல்
63. கைதை
64. வழை
65. காஞ்சி
66. நெய்தல்
67. பாங்கர்
68. மரா(அம்)
69. தணக்கம்
70. ஈங்கை
71. இலவம்
72. கொன்றை
73. அடும்பு
74. ஆத்தி
75. அவரை
76. பகன்றை
77. பலாசம்
78. பிண்டி
79. வஞ்சி
80. பித்திகம்
81. சிந்துவாரம்
82. தும்பை
83. துழாய்
84. தோன்றி
85. நந்தி
86. நறவம்
87. புன்னாகம்

88. பாரம்
89. பீரம்
90. குருக்கத்தி
91. ஆரம்
92. காழ்வை
93. புன்னை
94. நரந்தம்
95. நாகம்
96. நள்ளிருள்நாறி
97. குருந்து
98. வேங்கை
99. புழகு

கபிலர், ஆரிய அரசன் பிரக(து)த்தனுக்குத் தமிழின் சிறப்பை உணர்த்த 261 அடிகளில் பாடிய குறிஞ்சிப்பாட்டு என்னும் சங்க இலக்கிய நூலில்தான், பூப்பெயர்களின் இத்தொகுப்பு தரப்பட்டுள்ளது. உலக மொழியியலார் வியக்கும் 26,350 அடிகள் உடைய சங்க இலக்கியத்தில், இந்நூலின் 261 வரிகளும் அடங்கும். பொன்னின் சிறப்பைக் காட்டும் உரைகல் போல், புலவரின் திறனைக் காட்டும் அறத்தொடு நிற்றல் துறையும், உள்ளுறை உவமங்களும் ததும்பக் கபிலர் இந்நூலை இயற்றியுள்ளார்; பறம்பு வள்ளல் பாரியின் நண்பர், பைந்தமிழ்க் கருத்துக்களை வாரி வழங்கியுள்ளார் ! அறிவியல் ஓங்கி நிற்கும் இக்காலக்கட்டத்தில், மேற்குத் தொடர்ச்சி மலையில் மட்டும் ஐந்தாயிரத்தின் அணித்தாம் வகைத் தாவரங்கள் உள்ளதையும், அவற்றுள் பெரும்பான்மை, பூக்கும் தாவரவகை என்பதையும், துறை வல்லார் முன்மொழிகின்றனர் ! அறிவியல், ஓரடி எடுத்துவைத்து நடைபயிலத் தொடங்கிய ஈராயிரம் ஆண்டின் முன்னரே, 99 மலர்களின் பெயர்த் தோரணம் ஒன்றை, மரபுப் பாவில் தொடுத்தளித்த மாபெரும் புலவரின் பெருமை, நினைந்து நினைந்து வியந்து வியந்து, மகிழ்ந்து மகிழ்ந்து போற்றத்தகுமன்றோ?

குறிஞ்சிப்பாட்டு, 61 - 96 வரிகள், இதோ :

.... வள் இதழ்

ஒண்செங் காந்தள், ஆம்பல், அனிச்சம்,
தண்கயக் குவளை, குறிஞ்சி, வெட்சி,
செங்கோடு வேரி, தேமா, மணிச்சிகை
உரிது நாறு அவிழ்தொத்து உந்தூழ், கூவிளம்,

எரிபுரை எறுழம், சுள்ளி, கூவிரம்,
வடவனம், வாகை, வான்பூங் குடசம்,

எருவை, செருவிளை, மணிப்பூங் கருவிளை,
பயினி, வானி, பல்இணர்க் குரவம்,
பசும்பிடி, வகுளம், பல்இணர்க் காயா,

விரிமலர் ஆவிரை, வேரல், சூரல்,
குரீஇப் பூளை, குறுநறுங் கண்ணி,
குருகிலை, மருதம், விரிபூங் கோங்கம்,
போங்கம், திலகம், தேங்கமழ் பாதிரி,
செருந்தி, அதிரல், பெருந்தண் சண்பகம்,

கரந்தை, குளவி, கடிகமழ் கலிமா,
தில்லை, பாலை, கல்இவர் முல்லை,
குல்லை, பிடவம், சிறுமா ரோடம்,
வாழை, வள்ளி, நீள்நறு நெய்தல்,
தாழை, தளவம், முள்தாட் தாமரை

ஞாழல், மௌவல், நறுந்தண் கொகுடி,
சேடல், செம்மல், சிறுசெங் குரலி,
கோடல், கைதை, கொங்குமுதிர் நறுவழை,
காஞ்சி, மணிக்குலைக் கள்கமழ் நெய்தல்,
பாங்கர், மராஅம், பல்பூந் தணக்கம்

ஈங்கை, இலவம், தூங்குஇணர்க் கொன்றை,
அடும்பு, அமர்ஆத்தி, நெடுங்கொடி அவரை,
பகன்றை, பலாசம், பல்பூம் பிண்டி,
வஞ்சி, பித்திகம், சிந்து வாரம்,
தும்பை, துழாஅய், சுடர்ப்பூந் தோன்றி,

நந்தி, நறவம், நறும்புன் னாகம்,
பாரம், பீரம், பைங்குருக் கத்தி,
ஆரம், காழ்வை, கடிஇரும் புன்னை,
நரந்தம், நாகம், நள்ளிருள் நாறி,
மாஇருங் குருந்தும் வேங்கையும், பிறவும்,

அரக்கு விரித்தன்ன பருஏர் அம்புழகு.................... – கபிலர்

சோர்வால் வாழைப்பூப்போல் உள்ள நண்பர்முகம், தாமரையை வென்று மலர, இப்பாடல் அடிகளை மனப்பாடம் செய்து, சொல்லி உதவலாமே?

பாரதிதாசனின் கவிதை மொழிபெயர்ப்பில் உவமை – ஒரு பார்வை

உமாதேவி அழகிரி
மொரீசியசு

முன்னுரை

இருபதாம் நூற்றாண்டின் தமிழ்க் கவிதைக்குப் புதுநடையைத் தந்த இரு பெரும் கவிஞர்கள் பாரதியாரும் பாரதிதாசனும் ஆவர். பாரதியாரை உந்து ஆற்றலாகக் கொண்டு விடுதலை வேட்கை நிரம்பிய பாடல்களை எழுதிய பின் பல்வேறு பாடுபொருட்களில் தம் கவிதைப் பயணத்தைத் தொடர்ந்தார். இயற்கையாகவே கவி புனையும் ஆற்றல் அவருக்குக் கைவரப் பெற்றிருந்தது. எனவே உவமை நயம் பொங்கத் தம் பாடல்களை அமைப்பதில் பாவேந்தர் வல்லவராகத் திகழ்ந்துள்ளார். இக்கட்டுரை பாரதிதாசனின் கவிதை மொழிபெயர்ப்பில் உவமைக் கூறுகள் எவ்வாறெல்லாம் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன என ஆராய முற்படுகிறது.

1.1. மொழிபெயர்ப்பும் உவம அணியும்

இரண்டு மொழிகளைக் கருத்தளவிலும் அமைப்பளவிலும் இணைத்து ஒரு புதிய மொழியாக அடையாளம் காட்டுவதை மொழிபெயர்ப்பு எனலாம். அவ்வாறு இணைத்து ஒரு புதிய மொழியாக உருப் பெறச் செய்யும்போது தரும் மொழியாக எதைத் தெளிவு செய்து இந்நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுகிறது? அம்மொழியின் கருத்து எச்சிதைவு இல்லாமல் இரண்டாம் மொழி அல்லது பெறும் மொழியுள் ஊடுருவி ஒரு புது மொழியாக்கம் பெறுகிறது? அவ்வாறு பெறுவதும், பெறச் செய்வதும் மொழி பெயர்ப்பாளர்களிடையே ஒரு சவாலாகத்தான் இருந்து வருகிறது.

மொழி பெயர்ப்பில் ஏற்படும் சிக்கல்களைப் பொதுவானதாக எடுத்துக் கொள்ள முடியாது: பனுவல் வேறுபட்டு ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமாக இருக்கிறபோது சிக்கல்களும் அதற்கேற்றாற் போல் மாறுபடும். பொதுவாகப் பண்பாட்டு மொழிபெயர்ப்பு முதலான மொழி பெயர்ப்புகளில் சிக்கல்கள் தோன்றுவதைக் காணலாம். இலக்கிய வகை மொழி பெயர்ப்புகளில் சிக்கல்கள் அதிகமாகத் தோன்றுவதற்கு வாய்ப்பு உண்டு. இலக்கிய மொழி

பெயர்ப்பு என்பதால் அழகியல் நடையில் எழும் சிக்கல்களையும் காண முடியும். அணிநல வழக்குகளைப் பயன்படுத்தி உருவாக்கப்படும் உவமை உத்திகளால் ஏற்படும் சிக்கல்களும் உண்டு. இலக்கிய வகை மொழி பெயர்ப்புச் சிக்கல்களுக்குப் பெரும்பாலும் யாப்பு, அணி, உணர்வுப் பொருள் ஆகியவை காரணமாகும்.

கவிஞர்களின் கவிதைகளும் பாடல்களும் சொற்களிலும் பொருள்களிலும் அழகு செய்வதற்காக அறிமுகப்படுத்தப்படும் ஒரு பொருள் உருபை அணி என்று குறிப்பிடலாம்.

மொழியை அழகு செய்வது சொற்கள். அச்சொற்களை அழகு செய்வது அணி வழக்குகள். செய்யுள்களையோ, கவிதைகளையோ அழகுபடுத்தி அதன் பொருளைத் தெளிவாகச் சொல்லவே இவ்வணிகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. உவமை, உருவகம், பழமொழி, மரபுத்தொடர், விடுகதை முதலிய மொழி வகைகள் அணி வழக்குகளாக இடம் பெறுவதைக் காணலாம். இவ்வாறான வழக்குகளைப் பயன்படுத்தி அமைந்த ஒரு பனுவலையோ அல்லது ஒரு பகுதியையோ மொழி பெயர்க்க நேரிடும்போது அணி வழக்கு நிகரன்களைக் கொண்டே மொழி பெயர்ப்பை நிறைவு செய்ய வேண்டியுள்ளது. ஏனென்றால் தரும் மொழியில் பயன்படுத்தப்படும் உவமையைச் சாதாரண மொழி வழக்குகளைக் கொண்டு மொழி பெயர்க்கும் போது தரும்மொழியில் எந்த நோக்கத்திற்காக அவ்வணிகள் கையாளப்பட்டதோ அந்த நோக்கம் அடிபட்டுப் போகிறது. எனவே தரும்மொழி உவமைக்கு இணையாகப் பெறும்மொழியில் உவம வழக்காகப் பயன்படுத்துகிறபோது தரும்மொழியைக் காப்பாற்றி மொழிபெயர்ப்பைச் செம்மை செய்வதே நலம் பயக்கும்.

1.2 உவமை - பொருள் வரையறை

கவிதையில் உவமை வரும் பொருள் சிறப்புடையதாகவும் உயர்ந்த கருத்தைத் தருவதாகவும் இருக்க வேண்டும். இலக்கியத்தில் உவமை அக உறுப்பாகிய புலனாற்றலை அறிய உதவுகிறது. புலவனின் அறிவுச் சிறப்பு, அவனது பண்பாடு முதலியவற்றை அறிய நமக்குத் துணை புரிவன உவமைகளே.

பாடலில் பொருள் தெளிவுக்காகக் கூறப்படும் ஒரு பொருளோடு, சிறப்பு மிக்க வேறு ஒன்றை ஒப்புமை செய்தல் உவமையாகும். மொழி

தோன்றுமுன்னே உவமை தோன்றிவிட்டது. தொல்காப்பியம் உவமையின் பாகுபாட்டினைக் கூறுமிடத்துத் தொழிலும், பயனும், வடிவும், நிறமும் என்ற நான்கும் பாகுபாட வந்த உவமைக்கண் புலனாகும் (தொல்காப்பியம், பொருள் : உவமவியல் 1) என்று குறிக்கிறது. உவமை உயர்ந்த பொருளின் மேல்வாய் வரும் என்றும்; சிறப்பு, நலன், காதல், வலி ஆகிய நான்கு தன்மைகளையும் இருப்பிடமாகக் கொண்டு வரும் என்றும் கூறுகிறது.

1.3 பாரதிதாசனின் மொழி பெயர்ப்புக் கவிதைகளில் உவமைகள்

பாவேந்தரின் உவமைகள் அவரது அறிவுச் சிறப்பையும் பண்பையும் காட்டி நிற்கின்றன. பாத்திரப் பண்பு, மனநிலையை விளக்க இன்றியமையாதது உவமை. பாவேந்தரின் காப்பியங்களில் பாத்திரங்களின் பண்பு, மனநிலையை விளக்க உவமை கையாளப்படுகிறது. அவர் பாடல்களில் பொருளைப் புலப்படுத்தவே உவமைகள் கையாளப்படுகின்றன. சில உவமைகளில் புதுமையும், புரட்சிக் கருத்துகளும் காணப்படுகின்றன.

கவிஞன் தன் உள்ளத்தில் எழுந்த உணர்வின் வேகத்தை – இன்ப துன்ப உணர்வுகளைத் தன் உள்ளத்தில் எழுந்தவாறே உணர்த்த உதவுவன உவமைகளே. புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் கையாளும் உவமைகள் அவரை ஒரு மரபுக் கவிஞராகவும், இக்காலச் சமுதாயத் தாக்கம் பெற்ற புதுமைக் கவிஞராகவும் காட்டுகின்றன. இருபதாம் நூற்றாண்டில் இயற்கையின் அழகைப் பாடி – அழகின் சிரிப்பைப் பாடிப் பெரும் புகழ் எய்திய பாவேந்தரின் கவிதைகள், அவர் இயற்கை மீது கொண்டிருந்த தீராக் காதலை வெளிப்படுத்துகின்றன. பாவேந்தரின் உவமைகள் பெரும்பாலும் இயற்கைப் பிணைப்புடனேயே அமைந்துள்ளன என்பது நோக்கத்தக்கது. மேலும் மொழி பெயர்ப்பாளர்கள் அவற்றை எவ்வகையில் மொழி பெயர்த்துள்ளார்கள் என்பதும் மொழி பெயர்ப்பாளர்கள் தமிழ் இலக்கிய அணிகளை மொழி பெயர்க்கும் போது எதிர்கொள்கிற சிக்கல்களும் இக்கட்டுரையில் ஆராயப் பெறுகின்றன.

இக்கட்டுரையின் கண் பாரதிதாசன் கவிதைகளின் ஆங்கில மொழி பெயர்ப்புகளில் வினை உவமை, உரு உவமை, பயன் உவமை.மற்றும் மெய் உவமை எவ்வாறு அமைந்துள்ளன என்பது சில சான்றுகளுடன் ஆராயப்படுகின்றது.

வினை உவமைகளுக்கான இரண்டு சான்றுகள் பின்வருமாறு அமைந்துள்ளன.

1.3.1. நிலா

"நிலா" என்னும் கவிதையில் பாவேந்தர் பல உவமைகளைப் பயன்படுத்தியுள்ளார். பழமையிலே புதுநினைவு பாய்ந்தெழுந்தாற் போல, அழுதமுகம் சிரித்தது போல், அல்லி விரித்தாற் போல், சுழற்றி எறிந்த வெள்ளித் தட்டுத் தொத்திக்கிடந்தாற் போல், குருட்டு விழியும் திறந்தது போல் என இவ்வாறெல்லாம் நிலாவினை வருணித்துப் பாடியுள்ளார். அவற்றுள் சில மொழி பெயர்ப்பாளர்களின் மொழி பெயர்ப்புகள்,

அழுத முகம் சிரித்தது போல்
A sorrowing face coming bright with smile 1
Like a happy grin appearing
On a sorrow - stricken face 2
Like the smile that gleams on tearful face 3

இவ்வுவமை வினைப் பொருளை உணர்த்துகிறது. அழுத முகம் என்பது அழும் செயலைக் குறிக்கிறது. முதல் மற்றும் இரண்டாம் மொழி பெயர்ப்புகளில் **a sorrowing face, a sorrow stricken face** என அமைந்துள்ளதைக் காணலாம். சிரித்தது போல் **coming bright with smile, a happy grin appearing, the smile that gleams** என இணையான நிகரன்கள் தரப்பட்டுள்ளன. மூன்றாவது மொழி பெயர்ப்பினை நோக்கும் போது மூலத்திலுள்ள சொற்களின் வரிசைக்கேற்றவாறே மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இரண்டாம் மொழி பெயர்ப்பானது மூலத்துக்குரிய இணையான பொருள் தரும்படி அமைந்துள்ளது.

1.3.2. பெண்ணுக்கு நீதி

............................நீ
விளையாடுவாய் தாவி விளையாடு மான் போல்!

In your leisure time earned
Do go in for play free like a deer ! 1

Enjoy your leisure in gay abandon

Like a frolicking deer **2**

May you skip around in joy
Like the free, free deer !
Enjoy life in leisure time **3**

பெண்ணுக்கு விடுதலையும் நீதியும் வேண்டும். ஓய்வு சமயத்தில் மான் போல, சுதந்திரத்துடனும் இன்பத்துடனும் துள்ளித் துள்ளி விளையாட வேண்டும் என்பதைப் பாவேந்தர் தம் கண்முன் கண்ட காட்சியைக் கவிதை அடிகளில் புனைந்துள்ளார். மேற்காணும் மொழி பெயர்ப்புகளை ஆராயும் போது இரண்டாம் மொழி பெயர்ப்பு சரியாக அமைந்துள்ளது.

மூலத்தின் உவம உருவக வழக்குகளுக்கு நேர் நிகரான உவம, உருவக வழக்குகள் பெறும்மொழியில் இருந்தால், மொழிபெயர்ப்பில் அவற்றைப் பதிலீடு செய்ய இயலும். இல்லாதவிடத்து இணை நிகரான உவம, உருவக வழக்குகளாலோ (அவையும் இல்லாதவிடத்து) சாதாரண வழக்குகளாலோ மூலத்தின் உவம, உருவக வழக்குகளின் பொருளைப் புலப்படுத்திவிட முடியும்.

முதல் மொழி பெயர்ப்பில் மூல அடிக்கான சீர் நிரலை ஒத்த மொழி பெயர்ப்பு நிகழ்ந்துள்ளது எனத் தெளிவாகப் புலனாகிறது.

மூன்றாவது மொழி பெயர்ப்பில், வேலை ஒழிந்துள்ள நேரம் என்று மூலத்தில் முதல் அடியாக அமைந்துள்ளது. ஆனால் மொழி பெயர்ப்பில் கடைசியான அடியாக மொழி பெயர்க்கப்பட்டுள்ளது எனவும் **may you skip around in joy** என்பதில் **in joy** என்னும் தொடர் மிகைப்படுத்தியுள்ளது. **like the free, free deer !** என்பதில் **free** என்னும் சொல் அடுக்கி வந்துள்ளது எனவும் விடுதலை என்ற உணர்வும் மகிழ்ச்சி என்ற உணர்வும் வலிந்து மொழி பெயர்க்கப்பட்டுள்ளதையும் உணரமுடிகிறது.

"ஒரு நல்ல கலைஞனின் உயர்ந்த கருத்துகளை மற்றொரு மொழியில் சிதறாமல், கோணாமல் எடுத்துச் சொல்வதை ஒரு முனைப்பாட்டோடு கூடிய தெய்வீக யாத்திரையாகவே நான் கருதுகிறேன். மூலநூலில் ஈடுபாடு இருந்தால்தான் மொழிபெயர்ப்பது சுலபமாகவும் ஆன்ம திருப்தி அளிப்பதாகவும் இருக்கிறது. இதை நான் அனுபவத்தால் உணர்ந்திருக்கிறேன்" என்பார் பிரேமா நந்தகுமார்.

(தொடர்ச்சி அடுத்த இதழில்.......)

மதுரைத் தமிழ்ச்சங்கம் - 113ஆம் ஆண்டு தொடக்க விழா

சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த மதுரை மாநகரில் தமிழ் மொழிக்குக் கதியாக விளங்கக் கூடிய கம்பராமாயணமும் திருக்குறளும் எளிதிற் கிடைக்கப் பெறவில்லையே என்ற ஆதங்கத்தில், வள்ளல் பொன். பாண்டித்துரைத் தேவர் அவர்கள் 14.09.1901இல் மதுரைத் தமிழ்ச் சங்கத்தைத் தோற்றுவித்தார். தமிழ்மொழி வளர்ச்சிக்கும், வளத்திற்கும் அரண் செய்யும் நோக்கங்களைக் கொண்டு மதுரைத் தமிழ்ச் சங்கம் செயல்படத் தொடங்கியது. வள்ளல் பொன். பாண்டித்துரைத் தேவர் அவர்கள் தோற்றுவித்த சங்கத்தின் நோக்கங்கள் இன்றளவும் சற்றும் பிறழாது செயல்பட்டு வருகின்றது என்பது தமிழுணர்வுள்ள நல்லோர்கள் அறிந்த ஒன்றே.

அந்தப் பாதையிலே 14.09.2013ஆம் நாளன்று நான்காம் தமிழ்ச்சங்கம் என்று தமிழ் அறிஞர்களால் போற்றப்படும் மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் 113ஆம் ஆண்டு தொடக்கவிழா சிறப்புற நடைபெற்றது. முற்பகல் 10 மணியளவில், மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் செயலாளர் திரு. இரா. அழகுமலை அவர்களின் தலைமையிலும் செந்தமிழ்க் கல்லூரிச் செயலாளர் திரு. இரா. குருசாமி அவர்கள் முன்னிலையிலும் கல்லூரித் தலைவர் திரு. சு. வீரணசாமி அவர்கள், மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் துணைத் தலைவர் திரு. க. முத்தையா பசும்பொன் அவர்கள், கல்லூரி முதல்வர், பேராசிரியர்கள், அலுவலர்கள் மற்றும் தமிழ்ச்சங்க அலுவலர்கள் அனைவரும் சென்று மதுரைத் தமிழ்ச் சங்கச் சாலையில் அமைந்துள்ள வள்ளல் பொன். பாண்டித்துரை தேவர் அவர்களின் திருஉருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது.

தொடக்கவிழாவின் சிறப்பு நிகழ்ச்சியாக,

மதுரை நான்காம் தமிழ்ச்சங்கத்தின் தமிழ்ப்பணி மற்றும் வள்ளல் பொன். பாண்டித்துரைத் தேவரின் தமிழ்ப்பணி ஆகிய பொருண்மையில் உரையரங்கம் நடைபெற்றது. உரையரங்கத்திற்கு மதுரைத் தமிழ்ச் சங்கச் செயலாளர் திரு. இரா. அழகுமலை அவர்கள் தலைமையேற்க செந்தமிழ்க் கல்லூரிச் செயலர் திரு. இரா. குருசாமி அவர்களும், செந்தமிழ்க் கல்லூரித் தலைவர் திரு. சு. வீரணசாமி அவர்களும் முன்னிலை வகித்தனர். மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் துணைத் தலைவர் திரு. க. முத்தையா பசும்பொன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். கல்லூரி முதல்வர் (பொ.) முனைவர் மு. மீனா வரவேற்புரை நல்க, உதவிப் பேராசிரியர் திரு. மு. செந்தில்குமார் நன்றியுரை வழங்கினார். உரையரங்கில்,

முனைவர் சு. விஜயன்	மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் பணிகள்
பேரா. கி. வேணுகா	வள்ளல் பொன். பாண்டித்துரைத் தேவரின் தமிழ்தேசிய அரசியல் பணிகள்
முனைவர் கோ. சுப்புலெட்சுமி	நற்றமிழ் வளர்த்த நான்காம் தமிழ்ச்சங்கம்
முனைவர் மா. செல்வத்தரசி	பாண்டித்துரைத் தேவரின் காவடிச்சிந்து
முனைவர் அ. நந்தினி	நான்காம் தமிழ்ச் சங்கத்தின் தொடக்க காலப் பணிகள்
முனைவர் பி. ஆறுமுகம்	பாண்டித்துரைத் தேவரும் பைந்தமிழ்த் தொண்டும் (கவிதை)
முனைவர் ஜெ. கோகிலா	நான்காம் தமிழ்ச்சங்கத்தின் புலவர்கள்
முனைவர் பெ. இந்துராணி	நான்காம் தமிழ்ச்சங்கத்தின் தமிழ்ப்பணிகள்
முனைவர் சு. மலர்விழி	வள்ளல் பொன். பாண்டித்துரைத் தேவரின் படைப்புகள்
முனைவர் போ. முனியாண்டி	இலக்கிய இதழ்ப்பணி (செந்தமிழ்)
முனைவர் பா. நேருஜி	அறிஞர்களின் பார்வையில் மதுரை நான்காம் தமிழ்ச்சங்கம்
பேரா. மு. செந்தில்குமார்	மக்கள் போற்றும் வள்ளல் பொன். பாண்டித்துரைத் தேவர்
முனைவர் தி. பிருந்தா	பாண்டியன் நூலகம்

ஆகிய தலைப்புகளில் செந்தமிழ்க் கல்லூரிப் பேராசிரியர்கள் உரையாற்றினார்கள். செந்தமிழ்க் கல்லூரி மாணவர்களும், பல்வேறு கல்லூரிப் பேராசிரியர்களும், நகரப் பிரமுகர்களும் கலந்து கொண்டு விழாவைச் சிறப்பித்தார்கள்.

மதுரை நான்காம்தமிழ்ச்சங்கத்தின் செயல்பாடுகள் வள்ளல் பொன். பாண்டித்துரைத் தேவர் வகுத்துத்தந்த பாதையில் அடியொற்றிச் சிறப்பாக நடைபெறுவதைக் கண்டு, தமிழுள்ளமும் உணர்வும் மிகுந்த தமிழ் ஆர்வலர்கள் மகிழ்ந்து பாராட்டியது விழாவிற்கு மணி மகுடமாக விளங்கியது.

- முனைவர் மு. மீனா

ஆசிரியர் குழு

திரு. இரா. குருசாமி பி.ஏ.,

பெரும்புலவர் திரு. இரா. இளங்குமரன்

முனைவர் திரு. தமிழண்ணல்

முனைவர் திரு. கதிர் மகாதேவன்

முனைவர் திரு. க. சின்னப்பா

தொடர்பு முகவரி

ஆசிரியர்

செந்தமிழ்
மதுரைத் தமிழ்ச் சங்கம்
54, தமிழ்ச் சங்கச் சாலை
மதுரை - 625 001
தொலைபேசி : 0452 - 6575615

பதிப்பாசிரியர் : இரா. அழகுமலை, எம்.ஏ., எம்.ஃபில்.
செயலாளர், மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை – 1
தொலைபேசி : 0452 - 6575615

அச்சிடுவோர் : தவம் பிரிண்டர்ஸ், 32, மேலமாசி வீதி, மதுரை – 1

RNI Regd. No. 5508/57 September 2013 MA/130/2011-2013
Posted at Madurai BPC on 25th of every month

செந்தமிழ்க் கல்லூரி

மதுரைத் தமிழ்ச் சங்கம்

(தேசியத் தரக்கட்டுப்பாட்டுக் குழுவின் B+ தேசியத்தரம் பெற்றது)

மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றது.

54, தமிழ்ச் சங்கம் சாலை, மதுரை - 625 001 ✆ 0452 - 2343707, நிகரி : 0452 - 4373475

- இளம் இலக்கியம்
- இளங்கலை
- முதுகலை
- இளம்நிலை ஆய்வாளர்
- முதுநிலை ஆய்வாளர்
- பி.ஏ., பி.லிட்., எம்.ஏ., மாணவர்களுக்கான தமிழாசிரியர் பயிற்சி

நன்கொடை கிடையாது

சிறப்பு அம்சங்கள்

மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சி, யோகா மற்றும் தியானப் பயிற்சி, ஓலைச்சுவடி மற்றும் கல்வெட்டுப் பயிற்சி, பேச்சுக்கலைப் பயிற்சி, படைப்பாக்கத் திறன், விரிவுரையாளர் தகுதித் தேர்வுப் பயிற்சி போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

2013-2014ம் ஆண்டிற்கான சேர்க்கை நடைபெறுகிறது

செம்மொழித் திட்டத்தின் கீழ் பணி வாய்ப்புக்கள் உள்ளன

முனைவர் மு. மீனா
முதல்வர் (பொறுப்பு), செந்தமிழ்க் கல்லூரி

இரா. குருசாமி
செயலாளர், செந்தமிழ்க் கல்லூரி

அனுப்புநர்,

செயலாளர்
மதுரைத் தமிழ்ச் சங்கம்
மதுரை - 625 001

From

SECRETARY
Madurai Tamilsangam
Madurai - 625 001
TAMILNADU, S. INDIA

பெறுநர் / To,

Printed by V. Govindarajan, published by R. ALAGUMALAI M.A., M.Phil. on behalf of Madurai Tamil Sangam, Madurai and printed at Davam Printers, 32, West Masi Street, Madurai - 1, and published at 54, Tamil Sangam Road, Madurai. Editor R. ALAGUMALAI M.A., M.Phil.